விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 12 புதன்கிழமை (26.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038



ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## ஜனாதிபதி மகிந்த விடயத்தில் பான் கீ மூன் மெத்தன போக்கு!

### மனித உரிமை கண்காணிப்பகம் சாடல்

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விவகாரத்தில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைதி வழியிலான இராஜதந்திரம் என்கிற போர்வையில் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கிறார் என்று அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அமெ.விஜயம் மக்களுக்கு தெரியப்படுத்துக

### ஐ.தே.கட்சி கேட்கிறது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்தாலும் அவரது பயணத்திற்கு அரசாங்கப் பணம் செலவிடப்பட்டுள்ளதால் ஜனாதிபதியின் பயணம் குறித்து பல்வேறுகதைகளும்செய்திகளும்வெளியாகியிருப்பதால் ஜனாதிபதியின் அமெரிக்க விஜயம்தொடர்பானஅரசாங்கத்தின்பதிலைதெளிவாக நாட்டுக்கு வெளியிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடை (20ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளைக்கொடி விவகாரம்

# சரணடைந்த புலிகளைச் சுடுமாறு படையினருக்கு நான் கூறவில்லை!

### கோத்தபாய நீதிமன்றத்தில் சாட்சியம்



(கொழும்பு)

**வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் சுட்டுக் கொல்லுமாறு இராணுவத்திற்குத் தாம் உத்தரவிடவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.**

(20ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை விரைவில் பான் கீ மூனிடம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு விரைவில் தமது அறிக்கையை பான் கீ மூனிடம் கையளிப்பார் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் தீர்ப்புக்கே தலை வணங்குவேன்!

### சரத் பொன்சேகா

(கொழும்பு)

மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கே தான் தலை வணங்குவதாகவும் வேறு எவருக்கும் தான் தலைவணங்கப் போவதில்லை எனவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற தனது ரீட் மனு மீதான விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றங்கள் எவ்வாறான தீர்ப்பை வழங்கினாலும் மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கு மாத் (20ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்ட, பிரதேச செயலக பணியாளர்கள்

## திங்கள், புதன் கிழமைகளில் சீருடை அணிய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரிபவர்கள் திங்கள், புதன் கிழமைகளில் சீருடை அணியும் நடைமுறை விரைவில் அமுல்படுத்த தீர்மானித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்கள் கட்டாயம் சாறி உடுப்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன் யாழ்.மாவட்ட செயலகம், பிரதேச செயலகங் (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவலாக்கல் குறித்து அடுத்த மாதம் பேசப்படும்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

13வது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவது, நிறுவனப் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள துறைகளை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் அடுத்த மாதம் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தீர்மானித் (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றம் என்பது அரசியலமைப்புக்கு உட்பட்டது

### மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் இலங்கை அரசியல் அமைப்பிற்கு உட்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றம் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இராணுவ நீதிமன்றம் அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றமா? என்பது குறித்து பிரதம நீதியரசர் அசோக என் சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் குழு ஆராய்ந்தது.

நீதியரசர்களின் இந்த முடிவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் சஜித் சில்வா, ஏ. டபிள்யூ.சலாம், உபாலி அபேரத்ன ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு 107 இலக்க நீதிமன்ற மண்டபத்தில் அறிவித்தனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய சிறைத்தண்டனைக்கு எதிராக அவர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனடிப்படையில் அரசியலமைப்பின் படி இராணுவ நீதி (20ஆம் பக்கம் பார்க்க)




**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# வட.மாகாண சுகாதாரத் திணைக்களம் யாழ்.மாட்டீன் வீதியில் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சுகாதாரத் திணைக்களமும் வட மாகாண சுகாதார அமைச்சும் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் வரோதயர் நகர் திருகோணமலையில் இருந்து இல.55, மாட்டீன் வீதி,யாழ்ப்பாணம் என்ற முக வரிக்கு இடமாற்றப்பட்டு சகல நிர்வாக சுகாதார சேவைகள் தொடர்பான நடவடிக் கைகளும் நடைபெறுவதாக வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந் திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி நிர்வாகத் தொடர்புகளுக்கு குறித்த விலாசத்துடன் தொடர்பு மேற்கொள்ளு மாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3,2)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியா பார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌர வத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# யாழ்.நகர் ஆரியகுளம் சந்தியிலுள்ள படையினரின் உணவகத்தில் தீ விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் ஆரியகுளம் சந்தியிலுள்ள படையினரின் நலன்புரி உணவகம் நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் மின் ஒழுக்கி னால் தீ விபத்திற்குள்ளானது.

இதனால் உணவகத்தின் மேல் தளத்தி லிருந்த மின் உபகரணங்கள் மற்றும் பொருட் கள் எரிந்து நாசமடைந்ததுடன் மேற்தள சுவரும் பாதிப்புக்குள்ளானது.

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையின் விரைவான நடவடிக்கையினால் தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு தீ பரம் பல் தடுக்கப்பட்டது.

அத்துடன் இலங்கை மின்சார சபையின ரும் மின்னிணைப்பை உடனடியாக நிறுத்தி ஆபத்துக்களைத் தவிர்த்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ந-5)

# ஐ.சி.ஆர்.சி. தலைவர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் (ஐ.சி. ஆர்.சி) தலைவர் டுட்ரே கோனே நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று புதன் கிழமை இலங்கை வரவுள்ளார்.

இவர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்க ளுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ள துடன் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தி னால் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக 2009ஆம் ஆண்டு தெரிவு செய் யப்பட்ட கோனே உலக மனிதாபிமான அபிவி ருத்தி நிறுவனத்தின் தலைவருமாவார். (ந-5)

# 2இலட்சம் ஏக்கர் நெல் வயல்கள் முற்றாகச் சேதம்

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தி னால் 2இலட்சம் ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிலங் களில் விவசாயம் செய்வதற்காக மாத்தி ரம் விதைகள் மற்றும் பசளைகள் இலவச மாக வழங்கப்படவுள்ளதாகவும் விவசாய சேவைகள் ஆணையாளர் ரவீந்திர ஹேவாவிதாரன தெரிவித்தார்.

இந்த வெள்ளத்தினால் 4இலட்சம் ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கிய போதிலும் 2இலட்சம் ஏக்கர் முற்றாக சேதமடைந் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# அரச திணைக்களங்களில் தேசியக்கொடி திங்களில் ஏற்றி பணியை தொடர வேண்டும்

வினைத்திறனான அரச சேவையை மக்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கை களை யாழ்.மாவட்ட அரச திணைக்களங் களில் முன்னெடுப்பதற்கு யாழ்.இலங்கை நிர்வாக சேவையாளர் சங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் பொது நிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல அரச திணைக்களங்களிலும் ஒவ்வொரு திங்கட் கிழமையும் காலையில் தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைத்து பணிகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 30இலங்கை நிர்வாக சேவையாளர்கள் அங்கம் வகிக்கும் யாழ்.இலங்கை நிர்வாக சேவையாளர் சங் கம் நிறுவப்பட்டுள்ளது.

இச்சங்கத்தினர் கடந்தவாரம் விசேட கூட்டம் ஒன்றினை நடத்தினர்.இக் கூட்டத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் ஒவ்வொரு திங்கட் கிழமைகளிலும் காலை தேசியக் கொடியேற்றி,தேசிய கீதம் இசைப்பதுடன் திணைக்களத் தலைவர் அறிவுரைகள் வழங்கி பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

இந் நடைமுறை பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் ஆரம்பித்து படிப்படியாக ஏனைய திணைக் களங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சங்கத்தினர் யாழ்.அரச அதிப ருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அத்துடன் ஏனைய மாவட்டங்கள் போன்று நிர்வாக முகாமைத்துவப் போட்டி யில் பங்குபற்றி யாழ்.மாவட்ட வினைத்திற னான அரச சேவையை வெளிப்படுத்த வேண்டுமெனவும் யாழ்.அரச அதிபருக்கு யாழ். இலங்கை நிர்வாக சேவை சங்கத்தினர் எடுத்துரைத்துள்ளனர். (ந-5)

# சீருடையை வழங்கிய கான்ஸ்டபிள் கைது

தனது சீருடையை வழங்கி கொள்ளைச் சம்பவமொன்றுக்கு உதவினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் அங்குலான பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சீருடையுடன் அங்குலானயை சேர்ந்த நபர் ஒருவர் அப்பகுதியிலுள்ள கடை யொன்றில் கொள்ளையடித்ததாக கூறப்படு கிறது.இது தொடர்பாக கல்கிசை பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த முறைப்பாட்டை யடுத்து மேற்டி நபரும் பொலிஸ் கான்ஸ்டபி ளும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அநு.சிறைக்கு புதிய நிர்வாகம்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அநுராதபுரம் சிறைச்சாலையை நிர்வாகம் செய்வதற்காக புதிய குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணை யாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

சிறைச்சாலையின் தலைமை அதிகாரி மற்றும் சிரேஷ்ட அத்தியட்சகர் ஆகியோர் தொடர்ந்து பதவி வகிப்பர்.ஆனாலும் இவர் களுக்கு மேலாக சிறைச்சாலைக்குப் பொறுப் பாக ஒரு சிரேஷ்ட சிறைச்சாலை அதி காரியை தான் நியமித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் இச் சிறைச்சாலை யில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தால் மூன்று கைதிகள் உயிரிழந்ததுடன் பலர் காய மடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ந-5)

**அறைகள் வாடகைக்கு**

படிக்கும் அல்லது தொழில் புரியும் பெண்களிற்கு 186/6 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்திலும் ஆண்களிற்கு பலாலி வீதி, ஆலடிச் சந்திக்கு அருகிலும் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0774012924
(3576)

**தவறிவிட்டது**

29-4935 எனும் இலக்கமுடைய கச் சேரி-யாழ் சேவையில் ஈடுபடும் றோசா ரக வானினுடைய இன்சூரன்ஸ், ரக்ஸ், றூட் போமிற் ஆகியன தெல்லிப்பழை மினி பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்க. தகுந்த சன்மானம் வழங் கப்படும்.
தொலைபேசி இல:0776216215
கஜந்தனா தொலைத்தொடர்பகம்
- மல்லாகம் (பழைய நீதிமன்றத்தடி)
28, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி,
- யாழ்ப்பாணம்.
(3579)

# சமூக விஞ்ஞானமாணி பட்டம் பெற்றார்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும்கொழும்பு வெள்ளவத்தையில் வசிப்பவருமாகிய ப.ஜெகவனிதா 18ஆம் திகதி கொழும்பு பண் டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற Nisd-கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆங்கில மொழி மூல சமூக விஞ் ஞானமாணி BSW (Hons) பட்டம் பெற்றார்.

இவர் பவானந்தசிவம்-செல்வதிலகம் தம்பதிகளின் மகளும்,யா.சாவகச்சேரி இந் துக் கல்லூரியின் பழைய மாணவியும், இலங்கை சமூக விஞ்ஞான அமைப்பின் உறுப்பினரும்,தனியாள் உளவியல் ஆலோ சகரும் ஆவார். (இ)

**செல்லா சினிமா**




ஆடுகளமா அசத்துறானய்யா...
நம்மாளு...
காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30



ஜெய்குருதேவ்
**ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்**
THE ART OF LIVING

நல்லாசியுடன் இந்தியா வாழும் கலை நிறு வனத்திலிருந்து வருகை தந்துள்ள வேத பண்டிதர்களும் சிவாச்சாரியர்களும் சேர்ந்து உலக அமைதிக்காக சிறப்பு யாகம் நடத்தவுள்ளனர்.

இடம்:- இந்து சமய பேரவை , பலாலி வீதி, கந்தர்மடம்
காலம்:- 28.01.2011 (வெள்ளிக்கிழமை)
நேரம்:- பிற்பகல் 3.45 மணிக்கு

அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஆசி பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

தொ.பே: 0770474757, 0777222133, 0776622247, 0777740593, 0779492589

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

காசியிலிருக்கும் இறைவன் – காசிவிஸ்வநாதரும் இறைவி– காசிவிசாலாட்சியும் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தபோது இறைவன் சொன்னரா்.

"இந்த மனிதர்களை நாம் நம்பிக்கையோடுதான் படைத்திருக்கிறோம். இருந்தாலும் அவர்களுக்கு தான் நம்பிக்கையில்லை. எதிலும் ஒரு உண்மையான நம்பிக்கையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"என்ன அப்படிச் சொல்றீங்க? அதோ பாருங்க... எவ்வளவு பேர் காசியைத் தேடி வந்து கங்கையில் குளித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களெல்லாம் நம்பிக்கையில்லாவிட்டால் இவ் வளவு தூரம் தேடி வருவார்களா?" என்றார் தேவி.

சரி அதை சோதித்துப் பார்க்கலாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள். உடனே ஒரு திட்டம் போட்டார்கள்.

எப்படியென்றால்...

நாமிருவரும் பக்தர்கள் மாதிரி உருவத்தை மாற்றிக் கொண்டு கங்கைக்குப் போய் குளிப்போம். கொஞ்சநேரத்தில் சழலில் மாட்டிக் கொண்டது போல் நடிக்கிறேன். நீ உடனே கரையிலிருந்து சத்தம்போடு.

என்னுடைய வீட்டுக்காரரை யாராவது காப்பாற்றுங்களேன் என்று சத்தம் போடு. அத்தோடு இன்னுமொன்று சொல். யாராவது புண்ணியாத்மா அவரிடம்போய் அவருடைய முடியைப்பிடித்துத் தூக்க வேண்டும். அப்படி ஒரு சாபம் எங்களுக்கிருக்கிறது. புண்ணியாத்மா... அதாவது எந்தப்பாவமும் இல்லாத ஒருத்தர் தான் அவரைக் காப்பாற்ற முடியும். அப்படிப்பட்டவர்கள் யாராவது வெள்ளத்தில் குதித்து என் கணவரைக்காப்பாற்றுங்கள் என்று கூச்சல் போடு...

என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்றார் இறைவன்.

சரி என்று சொல்லி இருவரும் சாதாரண பக்தர்களை போன்று கங்கைக் கரைக்கு வந்தார்கள்.

அவர் இறங்கி குளித்தார். திட்டம் போட்டது போல் சுழலில் மாட்டிக் கொண்டது மாதிரி கத்தினார். பலர் ஓடிவந்தார்கள்.

உடனே இவர் 'பாவமில்லாத புண்ணியாத்மா ஒருவரால் தான் என் கணவர் காப்பாற்றப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அதனால் புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவருடைய முடியை பிடித்து தூக்கினால் அவரை காப்பாற்றிவிடலாம்' என்றார்.

இவர்கள் இதைச் சொன்னதும் திகைத்துப் போய் நின்றார்கள்.

ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்த பாவமெல்லாம் ஒவ்வொன்றாக ஞாபகம் வர ஆரம்பித்தது. சரி, இதற்கு நாம் 'லாயக்கில்லை' என்று ஒதுங்கிப்போக ஆரம்பித்தார்கள்.

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவர் வேகமாக ஓடிவந்து ஆற்றில் குதித்து அவரிடம் போய் முடியை பிடித்துத் தூக்கினார். அவரைக் காப்பாற்றிக் கரைக்கு கொண்டுவந்தார். அப்படிக் காப்பாற்றிய அந்த ஆளை இவர்களிருவரும் தனியாக ஒரு மண்டபத்துக்கு கூட்டி வந்து விசாரித்தார்கள்.

"நீ யாரப்பா?" என்று கேட்டார்கள். எதுவும் தெரியாததுபோல் 'நான் இந்த ஊர் அன்னசத்திரத்தில் வேலைசெய்யும் சமையல் காரன்' என்றான். "நீ கங்கையில் குளிப்பதுண்டா?" என்று கேட்டார்கள். நான் இந்த ஊரில் தான் இருக்கிறேன். இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை. எப்பொழுதாவது ஒரு நாள் அங்கே குளிப்பேன் என்றான்.

கங்கையில் மூழ்கி எழுந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும் போது அங்கே இன்றைக்கு குளித்துக் கொண்டிருப்பவர்களெல்லாம் தங்களை புண்ணியாத்மாவாக நினைக்கவில்லை. கங்கையில் குளிக்காத நீ... உன்னை புண்ணியாத்தமாவாக நினைத்து காப்பாற்ற வந்தாயே அது எப்படி? என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த ஆள் சொன்னான்:

கங்கையில் குளித்த பின்னர் தானே உங்களைக் காப்பாற்ற வந்தேன். அப்படிக் குதிக்கும்போதே என்னுடைய பாவம் எல்லாம் போயிருக்குமே... நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே... அதனால் தான் துணிந்து வந்து உங்களைக் காப்பாற்றினேன் என்றான்.

இறைவனும் இறைவியும் அவனுக்குக் காட்சி கொடுத்தார்களாம்.

ஸ்ரீ ராமநேத்திர சரஸ்வதி சுவாமிகள் இதைச் சொல்லியிருக்கிறார். கங்கையில் குளித்துக் கொண்டிருப்பவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்ற நம்பிக்கை பரிபூரணமாக இல்லை.

குளிக்காத ஒருத்தனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது.

அதனால் அவனால் கடவுளைப் பார்க்க முடிந்தது. கடவுளை நாமும் பார்க்க முடியுமா? – முடியாதா என்ற குழப்பமெல்லாம் நமக்கு வேண்டாம்.

நம்பிக்கையோடு வாழவேண்டும் என்ற உண்மையை மட்டும் இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொண்டால் போதும்.

ஏனெனில் இந்தக் கதையை கேட்டுவிட்டு என்னுடைய நண்பன் ஒருத்தன் குதர்க்கமாக ஒரு கேள்வி கேட்டான்.

"ஏன் சேர் ? கங்கையில் குளித்தால் பாவமெல்லாம் போய்விடும் என்று சொல்கிறீர்களே...

நான் எனக்கு வேண்டாத ஒருத்தனை அழைத்துக் கொண்டு போய் கங்கையில் தள்ளிவிட்டு அதன்பின் அங்கேய முழுக்குப் போட்டு நான் செய்த பாவத்தை கழுவிவிட்டு மறுபடியும் உங்களிடம் வந்து விடுகிறேன். நீங்கள் என்னை புண்ணியாத்மா என்று ஏற்றுக் கொள்வீர்களா சேர்" என்றான். நான் ஒருகணம் அதிர்ச்சியானேன். கொஞ்சம் அசந்தா நம்மளையே அங்கே அழைத்துக் கொண்டு போனாலும் போய்விடுவான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறியின் பணிப்புரைக்கமைய வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் பத்து பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நேற்றுக்காலை யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால்மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்கைய ளிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது அவர் உரையாற்றுகையில்,

மாணவர்கள் வீதி ஒழுங்குகள் பற்றியும் அவற்றினைக் கடைப் பிடிப்பது தொடர்பாகவும் நன்கு அறிந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் வீதிகளில் சமாந்தரமாக பயணிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

வீதி விபத்துக்கள் ஏற்பட இத்தகைய தவறான போக்குவரத்து முறைகளே காரணமாக அமைகின்றன என்று கூறினார். அத்தோடு சிறு வீதியிலிருந்து பிரதானவீதிக்குவரும்போது அவதானமாக இருக்க வேண்டும்.

துவிச்சக்கரவண்டிகள் அதிகமாக விபத்தில் சிக்குவது இத்தகைய தவறான போக்குவரத்து நடவடிக்கைகளால்தான் என அவர் குறிப்பிட்டார். அண்மைக் காலங்களில் பலர் துவிச்சக்கர வண்டிக்களில் சமாந்தரமாகப் பயணித்த குற்றத்திற்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அபராதம் செலுத்தியுள்ளனர்.

போக்குவரத்து ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வீதிகளில் பயணிப்பதால் இத்தகைய விபத் துக்களிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரியகுளத்தடியில் உள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இறுதிப்பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதால் இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் நேர்முக பரீட்சைக்கு தோற்றாத அனைத்து தொண்டராசிரியர்களையும் தங்களின் அனைத்து ஆவணங்களையும் கோவைப்படுத்தி எடுத்து வருமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-9)

# சுவாமி விவேகானந்தரின் 149 ஆவது ஜெயந்திவிழா

சுவாமி விவேகானந்தரின் 149 ஆவது ஜெயந்தி விழா இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

த.முருகானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தி.குமணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் தேவார மனனம், எழுத்துப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் சமிதியின் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கலும் நடைபெறவுள்ளன.

அத்துடன் கொழும்பு இராமகிருஷ்ணமிஷனால் யாழ்.பல்கலைக்கழக வன்னி மாவட்ட மாணவர்களுக்கும் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 230 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 340 | 400 | 380 |
| தக்காளி | 60 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 90 |
| கரட் | 120 | 160 | 140 |
| பூசணி | 40 | 40 | 35 |
| புடோல் | - | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 180-220 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 130 |
| பாகற்காய் | 100 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 60 |
| பயற்றங்காய் | - | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 180 | 120 |
| பீற்றூட் | 120 | 150 | 150 |
| கறிமிளகாய் | - | 300 | 300 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 200 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 150 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 60 | 45 |

# இராசி பலன்

*26.01.2011*

*(தை 12, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*

*சப்தமி பிற்பகல் 12.35 மணிவரை*

*சித்திரை பிற்பகல் 1.54 மணிவரை*

*இராகுகாலம் 12.36--2.06 மணிவரை*

*சுப நேரம் 5.06-6.36 மணிவரை*

**மேடம்** சிறப்பான நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலம் சீராகும், பொருட் சேர்க்கைக்கு வழிவகை செய்வீர்கள்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் பொருமையான செய்தி வந்து சேரும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடங்குவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**கடகம்** மதிப்பும் மரியாதையும் உயரும், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்துதவ முன்வருவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட சிறப்படையும் நாள், தொழில் சம்பந்தமான முக்கியமானவர்களை சந்திப்பீர்கள், செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பணியாளர் தொல்லை அகலும், தொழில் வளர்ச்சிக்கு மங்கையர்வழி ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**துலாம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல்நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், கலகலப்பான செய்திகள் வந்துசேரும், பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு** பயணவாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** எண்ணியகாரியம் எளிதில் நிறைவேறும் நாள், செலவிற்கேற்ப பணம் வந்து சேரும், கலைத்துறையில் ஆர்வம் கூடும், புதியதிருப்பமுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியை இன்று தொடரலாம், மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும், தந்தைவழி உறவில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்.

**மீனம்** வரவும் செலவும் சமனாகும், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, அலைச்சல் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
1951
08
26

இறப்பு
2010
12
27

காலனவன் கண்ணுக்கு
அப்பாவே நீ இரையா?
வாழத்துடித்தனீர் வாழத்துடித்தனீர்
வாழ்வின் வனப்பெல்லாம்
வாழ்க்கை எனும் பாதைதனை
பாதியிலே முடித்ததேன்!
பார்போற்ற நாம் வாழ
பணிகள் பல நீ செய்தாய்
பக்குவமாய் பலவுரைகள் பல கூறி
ஊர் போற்ற நம்மை வாழவைத்தாய்
பிறப்பு உண்டேல் இறப்பு உணர-அது
இயற்கையின் நியதி
ஆனால் பிரிவோ எம்மை
கதிகலங்க வைக்கின்றது
சொந்தங்கள் தரணியிலே
பல இருந்தாலும்
நம் தந்தைக்கு ஈடாகுமா?
தரணியிலே எப்போது எங்கே
நம் அப்பாவை காண்பது!
உம் பிரிவால் தவியாய்
தவிக்கின்றோம் நம் தந்தையே!!

## அமரர் மாணிக்கம் சிங்கராசா (அப்பன்)

எமது அன்பு விளக்கு அமரர் மாணிக்கம் சிங்கராசா அவர்களின் இறுதிச் சடங்கிற் கலந்து கொண்டு துயரமதிற் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் துயரமதைத் தெரிவித்தோருக்கும், துண்டுப்பிரசுரம் ,அச்சிட்டு விநியோகித்தோருக்கும் மற்றும் இன்னோரன்ன பல உதவிகளைப் புரிந்த அனைவருக்கும், அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலான ஆத்ம சாந்திக் கிரியைகள் மற்றும் இன்று நடைபெறும் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொண்டுள்ள உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இன்று காலை 8.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(3580)

70/2, பலாலி வீதி, கந்தர்மடம்.

இங்ஙனம் -குடும்பத்தினர்.

# அமெரிக்க தகவல்கூடம் யாழ்ப்பாண மக்களுடனான நெருக்கமான உறவின் ஓரம்சமே

## அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தெரிவிப்பு



அமெரிக்கத் தகவல் கூடம் யாழ். மக்களோடு அமெரிக்கா ஏற்படுத்திக்கொள்ளும் நெருக்கமான உறவுகளின் ஓர் அம்சம் எனத் அமெரிக்கத் தூதுவர் பற்றீரிசியா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

ஏ.டி.எஸ்.எல். இணைய இணைப்புடன் கூடிய அமெரிக்கத் தகவல் கூடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

அமெரிக்க மிஷனறியினர் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்னரே 1813ஆம் ஆண்டில் இங்கு வந்து இறங்கியவர்கள் ஆவர். இத் தொடக்க கால அமெரிக்கர்கள் ஆங்கில மொழியைக் கற்பித்ததோடு தாமே தமிழ் மொழியையும் பயின்று முதலாவது அச்சியந்திர சாலையை இங்கே நிறுவி முதல் தமிழ் செய்தித் தாளையும் ஆரம்பித்ததோடு இலங்கையிலேயே முதன் முதலானதாக ஒரு மருத்துவக் கலாசாலையையும் நிறுவினர்.

அமெரிக்கத் தகவல் கூடம் திறக்கப்படுவதானது நாம் யாழ். மக்களோடு கொண்டுள்ள தளராது தொடரும் அர்ப்பணத்தின் ஒரு அடையாளமாகும். இத் திறப்பு வைபவத்தோடு நாம் இன்னொரு அமெரிக்க முதற் காரியத்தை சாதித்து வைக்கிறோம். அதாவது அமெரிக்கத் தகவல் கூடம் தான் யாழ்ப்பாணத்தில் செயற்படும் முதல் ஏ.டி.எஸ்.எல். இணைய இணைப்புக்கொண்ட நிலையமாகும்.

அமெரிக்கத் தகவல் கூடம் யாழ்ப்பாணத்தை இலங்கையின் இதர பிராந்தியங்களோடும் பரந்த உலகத்தோடும் இணைக்கும் ஒரு நிலையம். எண்ணிம (டிஜிற்றல்) தொலைக்காட்சி கலந்துரையாடல்கள் வழியாக யாழ். குடிமக்கள் இப்போது நியூயோர்க் லொஸ்ஏஞ்சல்ஸ் ,வோஷிங்டன் டிசி ஆகிய நகரங்களில் உள்ள அமெரிக்க கல்விமான்களுடனும் வியாபார பிரமுகர்களுடனும் கலந்துரையாட முடியும்.

நாம் இப்போது கலந்துகொள்வது போல் இலங்கை பூராகவுள்ள பல்கலைக்கழக வலையமைப்புக்களுடனும் கண்டி ,ஒலுவில் ஆகிய நகர்களில் உள்ள எமது அமெரிக்கத் தகவல் கூடங்களுடனும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

நாம் இளைஞர்களை இணைய மற்றும் இணைய அலை பரப்பு,கணனி நிரல் அமைப்பு வாயிலாக தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவத் திறன்களை அபிவிருத்தி செய்திட முனைவோம்.

இணையத்தில் கிடைக்கப்பெறும் தரவு தளங்கள்,ஆங்கில மொழி நூல் சேகரிப்புக்கள் ,வழமையான புத்தகக்குழுக்கள், திரைப்பட நிகழ்வுகள் முதலியவை பாடசாலை மாணவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் கல்வி மற்றும் கலாசார மூலவளங்களாக அமையும்.

யாழ்ப்பாண அமெரிக்கத் தகவல் கூடம் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் யாழ். மக்களோடு ஏற்படுத்திக்கொள்ளும் நெருக்கமான உறவுகளின் ஓர் அம்சமாகும். USAID எனப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகாமைத்துவ நிறுவனமானது 20 ஆயிரம் முழுநேர தொழில் வாய்ப்புக்களை வட கிழக்கில் தனியார் நிறுவனங்களுடனான ஒரு புத்தாக்கமான பங்கேற்பு முயற்சியினால் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மேலும் நாம் மொழி பெயர்ப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அரங்கக் கலைகளை மேம்படுத்தவும் இல்லங்களில் ஏற்படும் வன்முறைகளை களையும் செயற்பாடுகளுக்கும் பல சிறுமானியங்களை வழங்கியுள்ளோம் .என்னுடைய சேகரித்த புத்தகங்களில் சில மர்ம நாவல்களை நான் யாழ். வாசிகசாலைக்கு பரிசளித்துள்ளேன்.

சமூக மட்ட ஆதரவு கொண்டதும் இளைஞர் மத்தியில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதுமான யாழ். சமூக செயற்பாட்டு நிலையம் எம்மோடு இணைந்து பங்களிக்க மிகவும் சிறப்பானதொரு அமைப்பாகும். முழு யாழ்.சமூகத்தாருக்கு கலாசார மற்றும் கல்வித்துறை மூல வளங்களை வழங்குவதற்கும் நாம் இவர்களோடு நெருக்கமான ஒத்துழைப்பை தரமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றார். (ஸ்ரீ-2-6)




## இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா தொழிற் பயிற்சி அதிகாரசபை யாழ்.மாவட்டத்தில் புதிய தொழில்களை விருத்தி செய்யும் நோக்கில் ஹோட்டல் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கயை ஹோட்டல் பராமரிப்பாளர், ஹோட்டல் மேற்பார்வை/உபசரணையாளர், ஹோட்டல் நவீன சமையலாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகள் பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் நடாத்தப்படவுள்ளது.

அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் அதிகம் முக்கிய பங்கு பெறுகின்றது.

இதற்கு புதிய மாணவர்கள் இணைக்கப்படவுள்ளதால், இதில் இணைய விரும்பும் மாணவ, மாணவிகள் தமது முகவரியுடன் கூடிய சுயவிபரக்கோவையைப் பூர்த்தி செய்து மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, இல 375, கே.கே. எஸ்.வீதி ,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இவ்வதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பூநகரிப் பிரதேச கலை இலக்கிய வட்டம் அங்குரார்ப்பணம்

(பூநகரி)

பூநகரிப் பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து பூநகரிப் பிரதேச கலை இலக்கிய வட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பணக்கூட்டம் நாளை பி.ப.2 மணிக்கு பூநகரிப்பிரதேச செயலர் பணிமனையில் பூநகரிப்பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

சகல கிராமசேவகர் பிரிவுகளிலும் உள்ள கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (ஸ்ரீ-9-84)

## ஆசிரியரின் திருமணத்திற்கு விடுமுறை வழங்கிய அதிபர் இடமாற்றம்



(கொழும்பு)

ஆசிரியர் ஒருவரின் திருமண நிகழ்வொன்றுக்காக ஹற்றன் ஹினிகத்தென்ன நவோதயா பாடசாலைக்கு விடுமுறை வழங்கியமைக்காக அந்தப் பாடசாலையின் அதிபர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஹற்றன் வலய கல்விப் பணிமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி குறித்த பாடசாலையின் ஆசிரியர் ஒருவருக்கு திருமண நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது பாடசாலையில் உள்ள ஏனைய 72 ஆசிரியர்களும் அந்த நிகழ்வில் சமுகமளிப்பதற்காக ஆயிரத்து 200 பாடசாலை மாணவர்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளரும் அனுமதி வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.

ஏற்கனவே அதற்கு அனுமதி வழங்கிய பணிப்பாளர் கம்பளைக் கல்வி வலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-9)


யாழ்ப்பாணத்திலுள்ள மரபுரிமை மையங்களின் மீள்புனரமைப்பும்,முகாமைத்துவமும் பற்றிய 5 நாள் வேலைப்பட்டறை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய மரபுரிமை அமைச்சர் கலாநிதி ஜெகத் பாலசூரிய, நெதர்லாந்து தூதரகச் செயலர் ஜேக்கப் பெரன்ஸ் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு நிரந்தரக் கட்டடம்

(பருத்தித்துறை)

சாவகச்சேரி பிரதேச சபைக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்து வருகின்றன.

பல இலட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடமாக இப்பிரதேச சபைக் கட்டடம் அமையவுள்ளது.

அதன் எல்லைப் பரப்பிற்குள் ஏ-9 வீதியில் இக்கட்டடம் அமையவுள்ளது.

இக்கட்டடம் இவ்வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு பூர்த்தியடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இச்சபை அலுவலகம் கொடிகாமத்தில் உள்ள கலாசார மண்டபம் ஒன்றிலேயே தற்காலிகமாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு ரூ.12500 அபராதம்

கொடிகாமம் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மோட்டார் சைக்கிள் சாரதிக்கு 12ஆயிரத்து 500 ரூபா அபராதமும் அபராதம் செலுத்தத் தவறின் 4 மாத சிறையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய சாரதியை கொடிகாமப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அவரிடம் விசாரணையை மேற்கொண்டபோது வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமலும் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமலும் மற்றும் மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டது. மேற்குறித்த 3 குற்றச்சாட்டுக்களின் பேரில் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நிதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் சாரதி முற்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 4 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

## ஒப்பந்தகாரர்களுக்கான கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி திணைக்களத்தில் ஒப்பந்த வேலை செய்யும் ஒப்பந்தகாரர்களுக்கான கூட்டம் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே, இத்திணைக்களத்தில் ஒப்பந்த வேலைகள் செய்யும் சகல ஒப்பந்தக்காரர்களையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-10)

## கவிதை நூல்களின் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலன் எழுதிய கவிதை நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் கவிஞர் எஸ்.கவிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9)

## ஆரோக்கியமான சூழலை உருவாக்க மக்கள் முன்வர வேண்டும்

### வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை செயலர் தெரிவிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசங்களைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் ஆரோக்கியமான சூழலை உருவாக்க மக்கள் முன்வர வேண்டுமென்று பிரதேச சபை செயலாளர் திருமதி அன்னலிங்கம் தியாகேஸ்வரி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசத்தில் உள்ள சந்தைகள், பொது இடங்கள், பிரதான வீதிகளை எமது பிரதேச சபையிலுள்ள இரு வாகனங்கள் தினம் சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

அதேபோன்று மக்களும் தமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)

## பாடல் போட்டி, இசைக்கருவிகள் மீட்டும் போட்டியில் வெற்றியீட்டியோர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலையமும் பிரன்ஸ் இசைக்குழுவினரும் இணைந்து நடத்திய பாடல் போட்டி மற்றும் இசைக்கருவிகள் மீட்டும் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாடல் போட்டியில் முதலாம் இடத்தை அழகரத்தினம் பிரதீபன் (அரியாலை மாம்பழம் சந்தி, இரண்டாம் இடத்தை செல்வி நோயல் பெராரோசாமினி (நாவலடி லேன் திருநெல்வேலி), 3 ஆம் இடத்தை நோயல் ஜெறாட் நிறோசன் (பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

அத்துடன் 10 பேர் அறுதல் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

தபேலா இசைக் கருவி மீட்டும் போட்டியில் முதலாம் இடத்தை தர்மராசா துவாரகன் (கலைவாணி வீதி அரியாலை), 2 ஆம் இடத்தை ஜோர்ச் எட்மன் பிரசாத் றொபேட் (ஏ.வி.வீதி கொழும்புத்துறை), 3 ஆம் இடத்தை தர்மராசா கிரிதரன் (கலைவாணி வீதி அரியாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (ஸ்ரீ-3-51)

## புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்களுக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடங்களைப் பதிவு செய்யுமாறும் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி அன்னலிங்கம் தியாகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றாடல் பாதுகாப்பு உரிமைப் பத்திரத்தைப் பெற்று கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும். இவற்றில் எரிபொருள் நிலையங்கள், குளிர்பான நிலையங்கள், அரிசி அரைக்கும் ஆலைகள், மரம் அரியும் ஆலை, தச்சுத் தொழிலகம், வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையங்கள் என்பவற்றை நிர்மாணிக்கும் போது பிரதேசசபை அனுமதி பெற்று நிர்மாணிக்க வேண்டும்.

இதனை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)

## விஷ அரவம் தீண்டிய இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

கரவெட்டிப் பகுதியில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவர் விஷ அரவம் தீண்டி சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரணவாய் மேற்கு பகுதியில் தோட்டத்தில் மாலை வேளை மாடு அவிழ்க்கச் சென்ற சிறுவன் ஒருவனை விஷ அரவம் தீண்டியுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த கு.தனுசாந்த (வயது 16 என்ற சிறுவன் சிகிச்சை பெற்று வருகின்றான்.

அத்துடன் மற்றுமொரு சம்பவத்தில் கரணவாய் வடக்குப் பகுதியில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவருக்கு விஷ அரவம் தீண்டியுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த சி.தயாநிதி (வயது 60 ) என்பவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஸ்ரீ-3-24)

## ஒதுக்கப்பட்ட இடங்களில் குப்பைகளை போடுமாறு கோரிக்கை

(அல்வாய்)

கரவெட்டி பிரதேச சபைக்குரிய கழிவுப் பொருட்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் போடாது வேறிடங்களில் போடுவதாக சுகாதார திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, கழிவுப் பொருட்களை கப்புதூ பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் போட்டு பிரதேச சுகாதார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

யாழ். செய்திகள்


## அலங்காரத் திருவிழா இறுதிநாள் நிகழ்வு

(புன்னாலைக்கட்டுவன்)

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா இறுதிநாள் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புகழ்பூத்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறுவதுடன் அண்மையில் கலாபூஷணம் விருதுபெற்ற நாதஸ்வர வித்துவான் கோதண்டபாணி பஞ்சமூர்த்தியை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. எனவே அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-9-78)





வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திர சிறியின் பணிப்பிற்கமைய நேற்று யாழ். ஆயர் இல்லத்தில் வைத்து மாணவர்களுக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை துவிச்சக்கர வண்டிகளை வழங்குவதையும் மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளை எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம்.

# சென்னையூடாக பயணிக்கும் இலங்கை யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு தேவை

## இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

சென்னையூடாக பயணிக்கும் இலங்கை யாத்திரிகர்களுக்கு பாதுகாப்புத் தேவையென்று புதுடில்லியிலுள்ள இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் நேற்று கூறியதாக த இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னையிலுள்ள மகாபோதி ஆலய பௌத்தமதகுருமார் மீது கடந்த 24ஆம் திகதி இரவு இடம்பெற்ற தாக்குதலில் பௌத்தமத குருமார்கள் காயமடைந்தனர்.

இவர்களை பார்வையிடுவதற்காக நேற்றுக் காலை பிரசாத் காரியவசம் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றிருந்தார்.

தமிழ் நாட்டின் பிரதான செயலாளர் மற்றும் முக்கிய அதிகாரிகளைச் சந்திக்கவுள்ள அவர் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கவலையைத் தெரிவித்துள்ளார்.

பல வருட காலமாக மகாபோதி பௌத்த விகாரை அங்கிருந்தபோதிலும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் முன்னர் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# தேரர்கள் மீதான தாக்குலுக்கு காரணம் இனப்பிரச்சினையை தூண்டும் சக்திகளே

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சென்னையிலுள்ள மகாபோதி ஆலய பௌத்த குருமார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இலங்கையில் இனங்களுக் கிடையில் சண்டையை மூட்ட முயலும் சக்திகளே காரணமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாம் எச்சரிக்கையாக இருந்து இந்த பொறியில் விழுந்துவிடாமல் இருக்க வேண்டுமெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மகாபோதி ஆலய அலுவலகத்தை ஒரு கூட்டத்தினர் நாசப்படுத்தியதோடு 4 பௌத்த மத குருமார்களையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் கூறியதாக இந்து பத்திரிகை கூறியுள்ளது. கத்திகளுடன் அலுவலகத்தினுள் நுழைந்த 10 பேர் கொண்ட குழுவினர் தளபாடங்களை உடைத்தனர். இதனைத் தடுக்க முயன்ற இலங்கை பௌத்தமத குருமார்கள் தாக்கப்பட்டனர். இவர்கள் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தேறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை அரசிடம் அடைக்கலம் கோரும் தமிழக மீனவர்கள்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் உள்ள நாகப்பட்டினம் கிராமத்தில் உள்ள 500 மீனவர்கள் தமக்கு பாதுகாப்பு வழங்கும்படி கோரி இலங்கை அரசிடம் அடைக்கலம் கோரவுள்ளனர்.

தமிழ் நாடு அரசும் இந்திய மத்திய அரசாங்கமும் உலக தரத்திலான கடற்படை, கரையோர பாதுகாப்புப்படை என்பவற்றை வைத்திருந்த போதும் நாம் மீன் பிடிக்கச் செல்லும் போது எம்மை பாதுகாக்கத் தவறியமையால் தான் நாம் எமது உயிரை பாதுகாக்கும்படி அயல் நாடான இலங்கையிடம் தஞ்சம் கோரத் தீர்மானித்தோம் என கிராம பஞ்சாயத்துத் தலைவரான எம்.கதிரவேல் இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஒருவாரத்தின் பின் 100 வரையிலான செயற்கை நார் படகுகளில் இந்த மீனவர்கள் அடைக்கலம் கோரி இலங்கை கடல் எல்லையை அடையவுள்ளதாகவும் இலங்கைக் கடற்படையினரால் எமது நாட்டு மீனவரான என்.ஜெயக்குமார் கொல்லப்பட்டமையையடுத்து இந்த கசப்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாநில மத்திய அரசுகள் இப்பிரதேச மீனவர்களின் துன்பத்தை விளங்கிக்கொள்ள அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நாம் இதனைச் செய்கின்றோம் என கதிரவேல் கூறினார்.

இந்திய அரசாங்கம் ஆழ்ந்த துயிலில் இருந்து விழித்து தமிழ் மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலை நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய பாரம்பரிய மீனவச் சங்கத்தலைவர் எஸ்.ஏ.மகேஸ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி கிழக்கில் தனித்துப் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அதன் ஊடகச் செயலாளர் அசாத் மௌலான விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தற்போது நடைபெறாத நிலையில் அம்பாறை மாவட்டத்திற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் மட்டும் தமது கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தனித்துப்போட்டி இடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களிலும் இரு கட்சிகளுக்குமிடையிலான நல்லிணக்கம் தொடரும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆயினும் தற்போதுள்ள நிலையில் தமது கட்சியின் அரசியல் எதிர்காலம் கருதியே தனித்துப் போட்டியிடும் முடிபுக்கு வந்துள்ளதாகவும் அக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




நாகறக்ஷ மற்றும் குறுளுறக்ஷ நடனக் கலைஞர்கள்

நாகறக்ஷவும் குறுளுறக்ஷவும் முகமூடி நடனங்களாக இருப்பதுடன் இவை தாழ் பிரதேச பாரம்பரிய நடன வகையைச் சேர்ந்தவையாகும். இந் நடனமானது. பாரம்பரிய கிராமிய நடனமான "கோலம்" என்பதன் ஒரு பகுதியாக ஆடப்படுகிறது. இந் நடனமானது பொதுவாக இரவு முழுவதும் ஆடப்படுகின்றதொன்றாகும். இந் நடனமானது பறவைகளின் புராண கால அரசனான "குறுளுறக்ஷ" தேவதைக்கும் புராண கால நாக ராஜனான "நாகறக்ஷ" இற்கும் இடையிலான மோதலை உருவகப்படுத்துகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

CENTRAL BANK OF SRI LANKA
60 growth & stability
1950 - 2010



# பப்பாசியை ஆக்கிரமிக்கும் பப்பாசி வெண்மூட்டுப்பூச்சி (Paracoccus marginatus)



தொற்றிய காய்கள்

யாழ்.மாவட்டத்தில் 113 கெக்டர் விஸ்தீரணத்தில் பப்பாசி செய்கை பண்ணப்படுகின்றது. ஆரம்ப கால்த்தில் பப்பாசிச் செய்கை வீட்டுத்தோட்டங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. 2005ஆம் ஆண்டிற்குப் பின்னர்



தொற்றலடைந்த ஆரம்ப நிலை

றெட்லேடி கலப்பினப் பப்பாசி அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பின் பப்பாசி செய்கை வர்த்தக ரீதியில் செய்கை பண்ணப்பட்டு வருவதுடன் உற்பத்தி அதிகரிப்பினால் பப்பாசி செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளின் வருமானமும் அதிகரித்துள்ளது. மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் றெட்லேடி கலப்பின பப்பாசி வர்க்கம் செய்கை பண்ணப்பட்டு அதன் உற்பத்தித்திறனை நேரடியாக விவசாயிகள் அறியக்கூடியதாக இருந்தமையும் பழப்பயிர் மேம்பாட்டுத் திட்டங்களின் ஊடாக றெட்லேடி பப்பாசிக் கன்றுகளை விநியோகித்து அதன் மூலம் றெட்லேடி பப்பாசியின் பலா பலன்களை நேரடியாக ஏனைய விவசாயிகளும் கண்டறிந்து கொண்டமையும் பப்பாசிச் செய்கையில் யாழ் மாவட்டத்தை மேம்படுத்தியதற்கு முக்கிய காரணிகளாகும்.

ஏழைகளின் கற்பகதரு என அழைக்கப்படும் இப் பப்பாசிக்கு 2008ம் ஆண்டில் வெண்மூட்டுப்பூச்சியின் தாக்கம் அச்சுறுத்தலாக அமையத் தொடங்கியது. ஆரம்பத்தில் இப்பீடையானது நாட்டின் கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இனங் காணப்பட்டது. தற்போ்து யாழ்.மாவட்டத்திலும் சங்கானை மத்தி, கெருடாவில் வடக்கு, கெருடாவில் தெற்கு, சண்டிலிப்பாய் வடக்கு, ஏழாலை வடக்கு, குப்பிளான் தெற்கு ஆகிய இடங்களில் உள்ள வீட்டுத்தோட்டங்களில் உள்ள பப்பாசி மரங்களிலும், வர்த்தக ரீதியில் செய்கை பண்ணும் தோட்டங்களில் உள்ள பப்பாசி மரங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தாது பாராமுகமாக இருந்தால் பப்பாசியின் உற்பத்தித்திறன் குறைந்து உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படும்.

### பாதிக்கப்படும் தாவரங்கள்

வெண்மூட்டுப்பூச்சியின் பல்வேறு இனங்களினால் பல்வேறு பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இருப்பினும் பப்பாசி வெண்மூட்டுப் பூச்சி (Paracoccus marginatus) இனமானது ஏனைய வெண்மூட்டுப்பூச்சி இனங்களை விட பல்வேறு விசேடமான இயல்புகளைக் கொண்டுள்ளது. பிரதானமாக இப் பூச்சி பப்பாசி மரங்களில் மோசமான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

வெண்மூட்டுப்பூச்சியின் ஏனைய இனங்கள் செவ்வரத்தை, குறோட்டன், றோசா போன்ற அலங்காரத் தாவரங்களையும் கத்தரி, வெண்டி, தக்காளி, பாகல் போன்ற மரக்கறிப் பயிர்களையும் மா, வாழை, ஆனைக் கொய்யா, சித்திரஸ் குடும்பத்தைச் சேர்ந்த பழப்பயிர்கள் ஆகியவற்றைப் பாதிக்கின்றன.

### பூச்சிகளின் பரம்பல்

பப்பாசி வெண்மூட்டுப்பூச்சி மிக விரைவாகப் பரவலடைந்து தற்போது பல நாடுகளிலும் பல இடங்களிலும் பரவியுள்ள ஒரு பூச்சியாகும். 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இப்பூச்சியின் பண்புகளை ஒத்த வெண் மூட்டுப்பூச்சி இனம் இலங்கையில் அவதானிக்கப்பட்டது.

### பாதிப்பை எவ்வாறு இனம் காண்பது?

இவ்வெண்மூட்டுபூச்சி தொற்றல் ஏற்பட்ட ஆரம்பப் பருவத்தில் பப்பாசி மரத்தின் இலையின் அடிப்பகுதி, இலைக்காம்பு, காய்கள், தண்டு என்பவற்றின் மேல் ஒட்டியுள்ள வெண் பஞ்சு போன்று காணப்படும். பூச்சிகளின் குடித்தொகை அதிகரிக்கும் போது இலவம் பஞ்சினால் சுற்றியது போல காணப்படும். நில மட்டத்திற்கு மேற்பட்ட எந்தவொரு மரத்தின் பகுதியிலும் இதனைக் காண முடியும்.

தொற்றல் ஏற்பட்ட பப்பாசி மரத்தின் இலைகளில் இவை சாற்றைக் குத்தி உறிஞ்சுவதால்

- மஞ்சள் நிறமான புள்ளிகள் உருவாகும்
- இலைகள் உருமாறும்
- இளம் தாவரங்கள் வளர்ச்சி குன்றும்

இவை சாற்றைக் குத்தி உறிஞ்சும் போது உட்செலுத்தும் நஞ்சுப் பதார்த்தம் இத்தாக்கத்திற்கு காரணமாகும். அத்துடன் இவற்றால் வெளிவிடப்படும் தேன் பாணி போன்ற கழிவுகளில் சூட்டிமோல்ட் எனப்படும் கரும் பூஞ்சணத்தின் தொற்றலால் ஒளித்தொகுப்பு பாதிக்கப்படும். பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து ஏராளமான பூச்சிகள் சாற்றைக் குத்தி உறிஞ்சிக் குடிக்கும் போது மரத்தின் வளர்ச்சியும், உற்பத்தித்திறனும் உணவு உற்பத்தியும் பாதிக்கப்படும்.

பழங்களின் தரம் குறைந்து சந்தைப் பெறுமானம் அற்றதாகும். விளைச்சல் குறையும். இதனால் விவசாயியின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படும். காய்களில் வெண்மூட்டுப் பூச்சிகளின் சுரப்பு காணப்படுவதால் அவற்றை உண்ணமுடியாத நிலை ஏற்படும்.

இப்பூச்சியின் உக்கிரமான தொற்றலால் முதிர முன் இலைகள், காய்கள் உதிரும். இலைகள் இறக்கும். இறுதியில் தாவரம் இறக்கும். இவ்வாறான பெரும் சேதத்தை ஏற்படுத்தி பப்பாசி மரங்களை ஆக்கிரமித்து பப்பாசி செய்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இப்பூச்சியைப் பரவாது தடுத்தல் மிக முக்கியமாகும்.

### நிறையுடலி

இவ் வெண்மூட்டுப் பூச்சியின் பெண் பூச்சியானது

- இளம் மஞ்சள் நிறமான உடல்
- 2-3மி.மீ நீளம்
- நீள்வட்டவடிவம்
- சிறிய முத்துப் போன்ற தோற்றம் கொண்டதாகும்.
- மா போன்ற மெழுகுப்படை ஒன்று உடலில் குறுக்காக அமைந்திருக்கும்.
- அதனால் இது சுண்ணாம்புப் பூச்சி எனவும் அழைக்கப்படும்.
- அதனால் இது சுண்ணாம்புப் பூச்சி எனவும் அழைக்கப்படும்.
- உடலைச் சுற்றி இதனால் சுரக்கப்படும் மெழுகினால் ஆன கட்டையான நார்கள் காணப்படும்.

### முட்டை

உடலைப் போல இருமடங்கு பருமனான மஞ்சள் நிறமான பஞ்சினாலான முட்டைப்பை சக்கரம் போல காணப்படும். அதில் 100-600 முட்டைகள் வரை காணப்படும்.

### அணங்கு

முட்டைப்பை வெடித்து அணங்குகள் வெளி வரும். அவை தமக்கு உணவு பெறப் பொருத்தமான இடம்தேடி அங்குமிங்கும் அசைந்து உணவு கிடைத்ததும் அசையாமல் ஓரிடத்தில் காணப்படும். அணங்குகளும் முட்டைப்பை இல்லாத முதிர்பூச்சிகளும் அசைந்து திரியும். ஆனால் முட்டைப்பை உள்ள முதிர் பூச் சிகள் அசையாது ஓரிடத்தில் இருப்பதைக் காணலாம். அணங்குகள் வளர்ச்சியடையும் போது மெழுகுச் சுரப்பு அதிகரிப்பதுடன் பருமனும் அதிகரிக்கும்.

### பூச்சிகள் பரவும் வழிகள்

வாழ்க்கை வட்டத்தை பூர்த்தி செய்ய ஒரு மாத காலம் எடுக்கும். இறுதி அவத்தையில் ஆண்பூச்சிகள் மாத்திரம் பறக்கும். முட்டைப் பையில் உள்ள நாரின் உதவியுடன் பெண் பூச்சிகள் தொங்கிக் கொண்டிருக்கும். இந் நிலை அவை பரவலுக்கு காரணமாக அமைகின்றது. முட்டைப் பைகளும், பூச்சிகளும் காற்றின் மூலம் வேறு மரங்களுக்குப் பரவும். பூச்சி யின் தாக்கத்தால் பாதிக்கப் பட்ட இலைகள் உதிர்ந்து விழுந்த பின் அவை காற்றி னால் அள்ளுண்டு செல்லும் போது அதிலுள்ள உள்ள முட்டைப்பைகளும் பூச்சிகளும் மற்ற மரங்களுக்கு பரவும். எனவே தாக்கம் ஏற்பட்டு உதிர்ந்த இலைகள், காய்கள் மற்றும் பகுதிகளை வெட்டிக் குவித்து வைக்கும் போதும் ஏற்றிச் செல்லும் போதும் வேறு இடங்களுக்குப் பர ுவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

| பூச்சிநாசினியின் இராசயனப்பெயர் | பூச்சிநாசினியின் வர்த்தகப்பெயர் | சிபார்சு செய்யப்பட்ட அளவு |
|---|---|---|
| இமிடாகுளோபிறிட் | அட்மியர் டாடாமிடா புரவாடோ | 1-2மி.லீ/2லீற் நீரில் கலக்கவும் |
| அசற்றாமிபிறிட் | மொஸ்பிலான் | 1-2கிராம் கலக்கவும்/ஒரு லீற்.நீரில் |
| தயாமெதொக்சாம் | அக்ரெறா | 0.5- கிராம் கலக்கவும்/ஒரு லீற்.நீரில் |

### பூச்சிகளைக் கட்டுப்படுத்தல்

இவற்றின் உடலைச் சுற்றி மெழுகுப்படை இருப்பதனால் கட்டுப்படுத்துதல் ஓரளவு கஷ்ட மாக இருக்கின்றது. எனவே ஒருங் கிணைந்த பீடைக்கட் டுப்பாட்டின் மூலம் இதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடியும்.

கூடிய ஈரப்பதன் உள்ள கால நிலை நிலவும் போது இயற்கையாக மிக இலகுவாகவே கட்டுப் படுத்தப்படும். கூடிய மழை காலங்களில் இப்பூச்சிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை அவதானிக்கலாம். பின் அதிக வெயில் காலத்தில் வெப்ப நிலை அதிகரிப்பு ஏற்படுவதனால் இவற்றின் எண்ணிக்கை பல்கிப் பெருகி பெரும் சேதத்தை விளைவிப் பதை அவதானிக் கலாம்

### பயிராக்கவியல் கட்டுப்பாட்டு முறைகள்

- தொற்றல் அடைந்த இலைகள், காய்கள் என்பவற்றை அகற்றி எரித்து விடவும்.
- நிலத்தில் விழுந்திருக்கும் இலைகளைப் பொறுக்கி எடுத்து எரித்து விடவும்
- தொற்றல் காரணமாக வெட்டி வீழ்த்தப் பட்ட மரத்தைக் குவித்து வைக்கவோ, குப்பை வண்டிகளில் ஏற்றிச் செல்லவோ அனுமதிக்க வேண்டாம். அவற்றைத் தோட்டங் களில் இருந்து அகற்றி எரிக்கவும். இது ஏனைய இடங்களுக்கு பூச்சிகளும் முட்டைகளும் பரவுவதைத் தடுக்கும்.

**க.தனபாலசிங்கம்**
**பாடவிதான உத்தியோகத்தர் (பயிர் பாதுகாப்பு)**
**பிரதி விவசாயப்பணிப்பாளர்**

- தொற்றிய மரத்தில் பூச்சிகள் காணப் படும் இடத்திற்கு 2 தேக்கரண்டி சலவைத் தூள் 1 லீற்றர் நீருடன் கலந்து விசிறவும்.
- அதி கூடிய வேகத்தில் நீரை நீர்க் குழாய்கள் மூலம் (hose pipe) தொற்றல் உள்ள இடங்களுக்கு விசிறவும். இதனால் பூச்சிகள் நீரால் கழுவி அகற்றப்படும். கீழே விழுந்த பூச்சிகள் மீண்டும் எறும்புகளால் மரத்தின் மேற்பகுதிக்கு காவிச் செல்லப்படாமல் இருக்க
- ஒட்டிகள் (கிறீ) பூசப்பட்ட கடதாசிமட்டைகளை மரத்தைச்சுற்றி கட்டிவிடவும்
- மாற்று விருந்து வழங்கிகளான அலரி, தேமா போன்றவை பப்பாசித் தோட்டங்களின் அருகில் இருப்பின் அவற்றைப் பிடுங்கி எரித்து விடவும்.

### உயிரியல் கட்டுப்பாடு

வெண்மூட்டுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கடைப்பிடிக்கும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளில் உயிரியல் கட்டுப் பாட்டு முறை முக்கியமானதாகும். வெண்மூட் டுப்பூச்சிகளை அழிக்கும் இயற்கை எதிரிகள் விவசாயச் சூழற் தொகுதியில் காணப்படுகின் றன. ஊண்சூறையாடிகளான கொக்சிலினிடே குடும்ப வண்டுகளின் குடம்பிகள் இவற்றை உண்டு அழிக்கின்றன. இவற்றில் ஒட்டுண் ணிகளாக வாழும் குளவிகள் இவற்றின் மேல் முட்டையிட்டு அவை பொரித்து வரும் குடம்பி கள் இவற்றை உண்டு அழிக்கின்றன. அசறோ பேக்கஸ் பப்பாய (*Acerophagous papaya*) எனப்படும் இவ் ஒட்டுண்ணிக்குளவி பெரிய விளானில் கடந்த வருடம் வைகாசி மாதம் 13ம் திகதி விடுவிக்கப்பட்டதாயினும் அவை விருத்தி அடையவில்லை. மீண்டும் அவற்றைத் தருவித்து விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இம் முறையானது வெண்மூட்டுப்பூச்சிகளைக் கட்டுப் படுத்து வதற்கு நீண்டகால செலவற்ற சூழலுக் குப் பாதுகாப்பான கட்டுப்பாட்டு முறையாகும்.

### இரசாயனக் கட்டுப்பாடு

பூச்சிநாசினிகளை விசிறி இப்பூச்சிகளை



உக்கிரமான தாக்கத்தின்போது

இலகுவில் கட்டுப்படுத்தலாம். அதேவேளை மாற்று விருந்து வழங்கித் தாவரங்களின் மூலமும் காற்றின் மூலமும் வேறு இடங்களில் இருந்து பரவும் வெண்மூட்டுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயன முறைகுறைவான சாத்தியத்தையே கொண்டுள்ளது.

கீழே அட்டவணையில் காட்டப்படுகின்ற பூச்சிநாசினிகள் தற்காலிகமாகவே சிபார்சு செய்யப்பட்டுள்ளன. வீட்டுத்தோட்டங்களில் இருக்கும் பப்பாசி மரங்களுக்கு இரசாயனங் களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நன்று. வீட்டுத்தோட்டங்களில் உள்ள தொற்றல் ஏற்பட்ட பப்பாசி மரங்களுக்கு பயிராக்கவியல் முறையில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிப்பதே பொருத்தமானதாகும். வர்த்தக ரீதியில் பப்பாசித் தோட்டங் களைக் கொண்டுள்ள விவசாயிகள் இப்பூச்சி நாசினிகளை விசிறலாம்.

பொதுவாக வெண்மூட்டுப்பூச்சிகளுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள டைமீதோயேற் பூச்சி நாசினி பப்பாசி வெண்மூட்டுப்பூச்சியை வெற்றி கரமாகக் கட்டுப்படுத்தாது. எனவே இப்பூச்சிநாசி னியை விசிறுவதைத் தவிர்க்கவும்.



# கள்ளிக்காட்டு இதிகாசம்

## 25



கவிப்பேரரசு வைரமுத்து

அவ்வளவுதான்! ரெண்டு மூணுநாளாய்ப் பேயத்தேவருக்கு அன்னந்தண்ணி செல்லவில்லை; காடுகரை போகவில்லை. 'ஏம் புத்தி கெட்டுப் போச்சே!' என்று புலம்பிக் கொண்டே இரவும் பகலும் கொட்டத்திலேயே விழித்துக் கொண்டு மாட்டின் காயத்தின் மீது கண்ணீர் விட்டுக் கழுத்தைக் கட்டிக்கொண்டே கிடந்தார்.

இந்த அடி அடிச்சதுக்கு அந்த மாடு நீ மனுசந்தானான்னு பார்வையால கூட ஒரு கேள்வி கேக்கலையே!

களியத் தின்னு களியத் தின்னுன்னு கெஞ்சிக்கெஞ்சிக் கேட்ட பயல் தாத்தாவை தேத்த முடியாமல் இடக்கையைத் தலைக்கு வைத்து வலக்கையை-சூடுகாக்கத் தொடைக்கிடையில் வைத்துச் சுருண்டுபடுத்துத் தூங்கிப்போனான்.

தட்டைக் கழுவிவைக்க விழித்திருந்த முருகாயி காத்திருந்து காத்திருந்து கடைசியில் முந்தானையைத் தரையில் விரித்து முடங்கிப் போனாள்.

கவரப்பட்ட மாடுகள் இந்த உயிர்களைப் போல உறங்கியிருக்குமோ? இல்லை தன்னைப் போல விழித்திருக்குமோ?

தன் இனத்திலிருந்த இரண்டு மாடுகள் காணோமென்று கொட்டத்துப் பசு ஒன்று உச்சக் குரலில் கதறியது. பேயத்தேவரை அந்தச் சத்தம் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னுக்கிழுத்துப் போனது.

கடலைக்கொடி தரைதெரியாமல் படர்ந்து மதமதவென்று மஞ்சள்பூப் பூத்திருந்த காலம். இறைவையை முடித்து கமலைவண்டி கழற்றி வால்கயிறு சுருட்டி வைக்கும்நேரம். "தாத்தா செவலக் காளையைப் பாம்பு கடிச்சிருச்சு" என்று கத்தினான் மொக்கராசு. பேயத்தேவர் ஓடிவந்து பார்ப்பதற்குள் தலை சுற்றி வரப்பில் வழுக்கிச் சரிந்து விழுந்தது செவலக்காளை. கடித்தது கடும்விஷப் பாம்பென்பதை வாயில்லா சீவனின் வாயிலிருந்து தள்ளிய நுரை சொல்லியது. யோசிக்க நேரமில்லை.

"ஏலே மொக்க! எருக்கெல கொண்டாடா. அந்த ஆமணக்குல ஒண்ண ஒடி" என்று உத்தரவிட்டவர் குப்பமணித்தழையைப் பறித்துக்கொண்டே வேப்பம்பட்டை தட்ட ஓடினார். எல்லாவற்றையும் ஒன்று கூட்டிக் கமலைக்கல்லில் தண்ணீர் ஊற்றித் தட்டினார்.

மாடு புரண்டு புரண்டு படுத்தது. தலை ஒரு பக்கமாய் இழுக்கத் தொடங்கியது.

அரைத்துக்கொண்டிருந்த மருந்தை எடுத்துக் கொண்டோடி மாட்டின் வாயை அகலத் திறந்து புகட்டக் கொஞ்சம் கொஞ்சமாய் கொஞ்சம் கொஞ் சமாய் விஷம் இறங்கியது. விஷம் நீங்கிய மாடு, அன்றைக்கு அவரை ஒருபார்வை பார்த்ததே! அப்படி ஒரு நன்றியுள்ள பார்வை எந்த மனுஷக் கண்ணி லாவது உண்டா?

கொம்பிலிருந்து குளம்பு வரைக்கும் அந்த மாடுகளின் அங்க லட்சணங்களைப் பார்த்து ரசிப்பார் பேயத்தேவர்.

நல்ல மாட்டுக்குத் தொளதொளவென்று இருக்கக் கூடாது தோலுஞ்சதையும். கல்லாய் இறுகி இருக்க வேண்டும் பிட்டமும் முதுகும்.

ரெண்டு மாடுகளுக்கும் சதையில் அப்படி ஓர் இறுக்கம் இருக்கும். கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் அழுத்தி எந்த இடத்தில் 'நிமிண்டு' பார்த்தாலும் தோல் சிக்காது. பாரம் சுமக்க வசதியாகக் கழுத்தில் மட்டும்தான் கொழுத்த சதை இருக்கும்.

செவலக்காளைக்கு நடு முதுகில் ஒரு சுழி இருக்கும். சில சுழி குடும்பத்தையே 'சுழிச்சிடும்' என்று சொல்வார்கள். செவலக்காளைக்கு இருப்பது நல்ல சுழியாம். பூரான் வடிவத்தில் நடுமுதுகில் ஆரம்பித்து முன்பக்கம் ஏறிமுடிந்தால் அது ஏறு பூரான் சுழி. அதில் குடும்பம் தழைக்குமாம். 'கல்லப் போட்டால் நெல்லு' வெளையுமாம்.

அதே சுழி நடுமுதுகில் ஆரம்பித்து வால்பக்கம் இறங்கிமுடிந்தால் அது இறங்கு பூரான் சுழியாம். குடிவிளங்காதாம் நெல்லப் போட்டாக் கல்லு' வெளையுமாம்.

செவலக்காளைக்கு இருப்பது ஏறுபூரான் சுழி.

"ஏறு பூராஞ்சுழி இருந்தே இந்தப் பொழப்பு. இப்ப உள்ள மாட்டையும் ஓட்டிட்டிப்போயிட்டாங்க. சுழியில கோளாறா? சோசியத்துல கோளாறா?"

குடும்பத்தின் 'நல்லது பொல்லது' களுக்கேற்ப மாடுகளுக்கும் இன்ப துன்பம் உண்டு. குடும்பத்துக்குள் எங்கோ ஒரு மூலையில் ஒரு சின்ன சந்தோஷம் தென்பட்டாலும் மாடுகளிரண்டும் கண்களில் ஆனந்தம் காட்டும். குடும்பத்தில் ஒரு சிரமமென்றாலும், யாராவது சீக்காய்க் கிடந்தாலும் கலந்துவச்ச தவிட்டுத்தண்ணி அப்படியே இருக்கும். மோந்துகூடப் பாக்காமல் மூஞ்சிதூக்கி நிற்கும்.

செல்லத்தாயி முதல்புருஷன் செத்துப்போனபோதும் அழகம்மா உடம்பை வீடுகடத்தியபோதும் அந்த மாடுகள் கதறிய கதறல் இருக்கிறதே! இன்னும் அடிவயிற்றில் பாளம் பாளமாய்க் கிடக்கிறது அந்தக் கத்தல்.

விடிய விடிய உறங்கவில்லை பேயத்தேவர். எங்கேயோ ஒரு காக்கை கத்தியது. விழித்துக் கொண்டன வேப்பமரத்துச் சிட்டுக்குருவிகள். பேயத்தேவரைப் போலவே தூக்கம் பிடிக்காத ஒரு சேவல் முன்னதாகக்கூவி சக கோழிகளை எழுப்பியது.

'ம்மா' என்னும் சத்தம் பேயத்தேவரைத் தூக்கி வாரிப்போட்டது.

'சே!' 'மனப்பிராந்தி!'

"மனுச மனசு எதத் தீவிரமா நெனைக்குதோ அதுவாவே ஆகிப்போகுது கழுத" என்று தினைத்துக் கொண்டார்.

மீண்டும் அதே சத்தம்

'ம்மா' 'ம்மா'!

"இல்லையே! இது பொய்யில்லையே?"

'கேட்ட சத்தமாச்சே... என் மாட்டுச் சத்தமாச்சே'.

போர்த்திருந்த போர்வையைத் தூக்கி எறிந்து விட்டு ஓடிப்போய் நடைவாசல் கதவு திறந்தார்.

பாதி அறுந்த கயிற்றோடு மயிலைக்காளையும் பிய்த்துக் கொண்டோடி வந்த முளைக்குச்சியோடு செவலக்காளையும் 'வந்துட்டம்யா' என்று கண்ணில் நீர்பெருக்கி நின்றன.

"வந்துட்டீங்களா... என் செல்லங்களா!"

மாடுகளின் மீது விழுந்து - புரண்டு - தடவி - வருடி - அழுது - புலம்பி - அணைத்து - அரற்றி அவற்றின் வாயோடு முத்தமிட்டுப் பைத்திய நிலையில் பரவசமானார் பேயத்தேவர்.

மனித பந்தங்களெல்லாம் தன்னை விட்டு விலகி வெகுதூரம் போய்க்கொண்டிருக்கும் போது, மாடுகள் மட்டும் எஜமான் வாசனை தேடி மீண்டும் தன்னிடமே வந்துவிட்ட ஆனந்தக் கூத்தாட்டத்தில் ஆசைதீர அழுதார் பேயத்தேவர்; மாடுகளும் சேர்ந்து அழுதன.

மாட்டுக்கண் - மனிசக்கண் என்ற பௌதிகம் தான் வேறுபட்டதே தவிர கண்ணீர் என்ற ரசாயனம் மட்டும் அவர்களுக்குள் வேறுபடவில்லை.

'ம்மா'

கனாக்கண்டு விழித்துக் கொண்டவனைப் போல் கண்களைக் கசக்கிக் கொண்டு ஓடிவந்த மொக்கராசு மாடுகளைக் கண்டதும் மகிழ்ச்சியாகி "அவிங்களக் குத்திக் கொல்லாமலா வந்தீக" என்று செல்லக் கோபம் கோபித்துக் கொம்பு பிடித்துத் தாடை தடவினான்.

வாசல்பெருக்க எடுத்த விளக்குமாற்றோடு திக்கித் திக்கி ஓடிவந்த முருகாயி மாடுகள் கண்டு மலர்ந்து "ஏலேல சிங்கன் பொருள் எங்கேயும் போகாதில்ல" என்று 'சொலவம்' சொன்னாள். களைத்தோடி வந்த மாடுகளுக்குக் குலுதாணியில் தண்ணிகாட்டி, கொட்டத்தில் கட்டிவைக்கப் போனபோது மொக்கராசைத் தடுத்தார் பேயத்தேவர்.

"யப்பா! மாடு நம்ம மாடா இருக்கலாம். இருந்தாலும் வெவகாரம் முடியாம வீட்ல கட்டக்கூடா தப்பா".

'அம்பலக்கல்லு' தான் கள்ளிப்பட்டிக்கு ஐகோர்ட். பொறணி - பொதுவிவகாரம் - பஞ்சாயத்து - உள்ளூர்ப் பொல்லாப்பு - உலக அரசியல் எல்லாமே அம்பலக்கல்லில்தான். நான்கு குத்துக்கல்லை முட்டுக்கொடுத்து ஊர்மையத்தில் போடப்பட்ட பலகைக் கல் அது. அதையொட்டி ஓர் அரசங்குட்டி. "இருபத்தோரு வயசுக்கு மேல மனுச எலும்புக்கு வளர்ச்சி இல்லேங்கிற மாதிரி வச்சநாள்லயிருந்து ஒரு பத்துமாசம் வளந்திச்சு. அப்புறம் நின்னு போச்சு". அந்தச் 'சவலை' மரத்தில் கட்டினார் பேயத்தேவர் 'மயிலை-செவலை' இரண்டையும்.

தவணைமுறையில் விடிந்து கொண்டிருந்தது வானம். ஒவ்வொரு கண்ணாய் விழிக்கத்தொடங்கிய நேரம். சில கிழடுகள் மட்டும் செங்கல் உரசி, பல்லுள்ள இடத்தில் மட்டும் அப்படியும் இப்படியும் இழுகி, வாய் கொப்பளித்த தண்ணீரில் வாசலும் தெளித்துவிட்டு அடுத்த ஆளுக்கு ஆகுமென்று மிச்சத் தண்ணீரைச் சொம்போடு வைத்துச் சிக்கனம் செய்தன.

(வளரும்)



# அ'புரம் சிறைச்சாலை தாக்குதல் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற கைதிகள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சம்பவம் இடம்பெற்று சில மணித்தியாலங்களில் தாம் அங்கு நேரில் சென்று பார்வையிட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் இடம்பெற்ற குழப்ப நிலைமைகள் தொடர்பில் பக்கச் சார்பற்ற விரிவான விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டதுடன் 23 பேர் காயமடைந்துள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டதாகவும் முறுகல் நிலைமையைக் கட்டுப்படுத்ததுப் பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சிறைச்சாலை வளாகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது வசதிகள் குறித்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் மீது அதிகாரிகள் தாக்கியதாகவும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அநுராதபுர சிறைச்சாலைக் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து தமக்கு சில கைதிகள் முறைப்பாடு செய்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பிபிசி யிடம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## குச்சவெளி நிலவெடிப்பினால் ஆபத்து ஏற்படாது

குச்சவெளிப் பிரதேசத்தில் ஏற்பட்ட நில வெடிப்பினால் ஆபத்து ஏற்படாது என தேசிய கட்டட நிர்மாண ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.நிலக்கீழ் நீர் வெளிப்பட்டதனால் இவ்வாறு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

தேசிய கட்டட நிர்மாண ஆய்வு நிறுவன அதிகாரிகள் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் இந்த விடயத்தை அறிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்தில் பூமி அதிர்வோ அல்லது மண் சரிவோ ஏற்படுவதற்கான வாய்ப்புக் கிடையாது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2)



யா/ சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அதிபர் அமரர் கணேசராசாவின் பாரியார் திருமதி. விக்கினேஸ்வரி கணேசராசா , பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் ஆகியோருடன் விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## மக்களுக்கு நிவாரணம் வழங்காது

# ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் இறக்குமதி

மக்களுக்கு எதுவித நிவாரணங்களையும் வழங்காத அரசாங்கம் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை வழங்கி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர், பிரதி அமைச்சர்களும் சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

யுத்த காலத்தில் ஆளும்கட்சி அமைச்சர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்ட போதிலும் தற்போது சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் யுத்த வெற்றியின் நலன்களை அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். பாதுகாப்பு செலவுகளுக்காக பொதுமக்கள் பாரியளவு பங்களிப்பை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சவுதி அரேபியாவில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட பணிப்பெண்கள் மீட்பு

சவுதி அரேபியாவில் 17 மற்றும் 20 ஆண்டுகளாக வீட்டுக் காவலில் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கைப் பணிப்பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த குசுமா நந்தினி என்ற 51 வயது பெண் கடந்த 17 ஆண்டுகளாக ரியாத் நகரில் வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் மற்றுமொரு பெண்ணான கல்நேவ பிர தேசத்தைச் சேர்ந்த டி.பி.ஹேமலதா என்ற 45 வயது பெண் கடந்த 20 ஆண்டுகளாக குவய்யா நகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவிற்கான இலங்கை தூதரக அதிகாரிகளின் முயற்சியினால் குறித்த பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குசுமா நந்தினி என்ற வீட்டுப் பணிப்பெண்ணின் எஜமானார் 15 ஆண்டுகள் அடிமையாகப் பயன்படுத்தி பின்னர் உறவினர் ஒருவரிடம் அடிமைப் பணிக்காக அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பெண்கள் தற்போது தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். (2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### அல்லற்கிழங்கு

**Botanical Name - Dioscorea pentaphylla**

**Family - Dioscorea**

இது உயரமான,மெல்லிய முட்களைக் கொண்ட ஏறுகொடித்தாவரமாகும். இதன் மெல்லிய தண்டுகள் இடப்பக்கமாக சுருண்டு காணப்படும். இலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பாகும். 3-5 பிளவுபட்ட சோணைகளைக் கொண்ட இலைகளாகும். வெள்ளை கலந்த மஞ்சள் நிறமான சிறிய பூக்கள் கொத்தாகக் காணப்படும். தண்டுருவான வேர்க்கிழங்குகளைக் கொண்டது.

**பரம்பலும், இனவிருத்தியும் :-**

யாழ்.மாவட்டத்தில் கைதடி, சண்டிலிப்பாய், மட்டுவில்,நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. வேர்க்கிழங்குகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.


**அல்லற்கிழங்கின் வகைகள்:**

அல்லற்கிழங்கில் 16 வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதன் தாயகம் உலர் வலய ஆசியாவாகும். 3 உப இனங்கள் தான் உருவவியல் ரீதியாக அதன் வேர்க்கிழங்கின் அமைப்பைக் கொண்டு வேறுபடுத்தி இனங்காணக் கூடியதாக உள்ளது. 3 வகைகளுள் முதலாவது மென்மையான குழாயுருவான வேர்க்கிழங்கு மண்ணின் மேற்பரப்பிற்கு அண்மையாகக் காணப்படும். இரண்டாவது வகையான வேர்க்கிழங்கானது ஆழமாக நிலத்தில் புதைந்து காணப்படும். மூன்றாவது வகையானது கடினமான வேர்க்கிழங்கை கொண்டது. விரும்பத்தகாததும் குமட்டலை ஏற்படுத்தக் கூடியதுமாகும்.

இதில் நச்சுவகைகளும் நச்சுத்தன்மை இல்லாத வகைகளும் உண்டு. முக் கியமாக கவனிக் கப்பட வேண்டியது யாதெனில், 100°C யில் மூன்று, நான்கு முறை கொதிக்க வைத்து நன்கு கழுவி தோல்நீக்கிய பின்பு தான் உட்கொள்ள வேண்டும்.



அல்லற்கிழங்கின் பூ



அல்லற்கிழங்கு

**"அல்லற்கிழங்கு உண்டால் கல்லையும் புரட்டுவான்"** என்பது அனுபவமொழி. சித்த மருத்துவத்தில் மேற்கூறிய இரண்டாவது வகைக்கிழங்கானது உடலிற்கு பலத்தை கொடுக்கக் கூடியது. (General Tonic) இதன் பூக்களை சம்பல் அல்லது துவையல் செய்து சாப்பிடலாம்.

அல்லற்கிழங்கானது இன்று நெடுந்தீவு, மட்டுவில் பிரதேச மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், எவ்வாறான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதில்தான் அதன் நச்சுத்தன்மை தங்கியுள்ளது.

அல்லற்கிழங்கானது மெல்லிய ஏறுகொடியாக இருந்தாலும் இதன் வேர்க்கிழங்கு ஆழமாக இருக்கும். இதனை நன்கு கழுவி மேற்றோல் சீவி நன்றாக கொதிக்கச் செய்து பின்பு உண்டால் வயிற்றுநோ குணமாவதுடன் உடலிற்கு பலத்தை கொடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் உண்டு பண்ணும்.


இவ் அல்லற்கிழங்கில் விற்றமின் B1 , B2, B6 ஆகியன காணப்படுகிறன.

இதனைவிட இதன் சில இனங்களில் Dioscorine ($C_{13}H_{19}O_2N$) எனும் ஒருவித அல்கலொயிட் காணப்படும்.

இவ் அல்கலொயிட்டினை அதிகளவில் கொண்ட வேர்க்கிழங்கை உட்கொண்டால் சுவாச செயற் தொகுதியினை செயலிழக்கச் செய்து இறப்பையும் ஏற்படுத்தலாம். எனவே, சரியான இனங்களை தெரிவு செய்து சரியான முறையில் உட்கொண்டால் சிறந்த பலனைப் பெறமுடியும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# வாழ்க்கையின் முக்கியபடி 25ஐ அறிந்துகொள்ளுங்கள்



**1. மனதை ஒருமுகப்படுத்துங்கள்**

அந்தந்தக் கணத்தில் அந்தந்த விடயத்தில் மட்டும் முழுமையாகக் கவனம் செலுத்துங்கள். கடந்துபோனவை பற்றியோ, எதிர்காலம் பற்றியோ மனதை அலை பாய விடாதீர்கள். மனதை ஒருமுகப்படுத்துவது ஆரம்பத்தில் கடினமாக இருக்கும். ஆனால் தொடர் பயிற்சியில் இது கை கூடி விடும்.

**2. சந்தோஷத்துக்கு நேரம் ஒதுக்குங்கள்**

சந்தோஷமாக இருப்பதற்கும், ரிலாக்ஸாக கழிப்பதற்கும் தினசரி அரைமணி நேரமாவது ஒதுக்குங்கள். அந்த நேரத்தில் புத்தகம் படிப்பது, இசை கேட்பது,டீ அருந்துவது என்று உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

**3. உங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்**

உங்கள் தேவைகள் பூர்த்தியான பின் மற்றவர்களுக்கு மனப்பூர்வமாக கொடுங்கள். இது சுயநலமல்ல, முக்கியமான விடயம்.

**4. செயற்பாடுகளை மாற்றுங்கள்**

'மாற்றம்' என்பது வாழ்வின் ஒருமுக்கியமான அங்கம். அவ்வப்போது நமது செயற்பாட்டு முறையையும், சிந்தனை முறையையும் மாற்றிக்கொள்வது ஆரோக்கியமானதே.

**5.தியானம் செய்யுங்கள்**

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக தியானம் செய்கிறார்கள. சிலர் மனதை ஒருமுகப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறார்கள். சிலர் மந்திரம் ஜெபிக்கிறார்கள். உங்களுக்கு எந்த முறை சரியாக வருமோ அந்த முறையில் தியானம் செய்யுங்கள்.

**6. சமநிலை காக்கவும்**

சிலர் தங்கள் உடம்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, மனதைப் புறக்கணித்துவிடுவார்கள். சிலரோ ஆன்மீகம் , தியானம் என்று இருப்பார்கள். உடலில் அதிக கவனம் செலுத்தமாட்டார்கள். இரண்டுக்கும் இடையே ஒரு சமநிலை அவசியம்.




**7. வலியும் நல்லதே**


உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ ஏற்படும் வலி என்பது ஒரு'சிக்னல்' ஏதோ தவறாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் அறிகுறி. அதில் உரிய கவனம் செலுத்துங்கள்.

**8.மனம் திறந்து அழுங்கள்**

துக்கமான,வருத்தமான நேரங்களில் மனம் திறந்து அழுங்கள். அழுகை என்பது பலவீனத்தின் அடையாளம் அல்ல. இதயச் சுமையைக் கரைக்கும் கரைப்பான்.

**9. மன்னியுங்கள்**

நீங்கள் ஒரு தவறு செய்திருக்கலாம். அதற்காக குற்ற உணர்ச்சி கொண்டு வருந்தாதீர்கள். அதேபோல் மற்றவர்கள் தவறு செய்தாலும் மன்னித்து விடுங்கள் .அதுவே நிம்மதி.



**10. பட்டினி கிடக்காதீர்கள்**

" டயட்' டில் இருக்கிறேன் பேர்வழி என்று கொலைப்பட்டினி கிடக்காதீர்கள். எடையைக் குறைக்க 'டயட்' டில் இருந்தாலும் அவ்வப்போது கொஞ்சம் போல சாப்பிடுங்கள்.

**11. கொழுப்பைப் புறக்கணிக்காதீர்கள்**

உடல்நலத்துக்கு கொழுப்பு அறவே கூடாது என்று குருட்டுக்கணக்குப் போட்டு அதை அறவே ஒதுக்கிவிடாதீர்கள். உடம்பு மற்றும் மூளையின் செயற்பாட்டுக்கு 'ஒமேகா 3,6,9 பேட்டி அசிட்டுகள்' அவசியம்.

**12.அவசரத்தில் அள்ளித் "திணிக்காதீர்கள்"**

நமது'வயிறு நிறைந்ததை 20 நிமிடங்களுக்குப் பின்னர்தான் மூளை உணர்கிறது. எனவே அவசரப்பட்டு அள்ளித்திணித்து வயிற்றை நிரப்பாதீர்கள்.

**13. விரும்பியதை சாப்பிடுங்கள்**

ஒன்றைச் சாப்பிட வேண்டும் என்று மனம் துடிக்கிறது... ஆனால் உடம்பு தடுக்கிறதா? விரும்பியதை கொஞ்சம் போலச் சாப்பிடலாம் தப்பில்லை. எடையைக் குறைப்பது என்பது 'சுயசித்ரவதை'யாக அமைந்து விடக்கூடாது.

**14. உணவை கணக்கிடுங்கள்**

உங்களின் உணவுப் பழக்கத்தை மேம்படுத்த, நீங்கள் அன்றாடம் என்ன சாப்பிடுகிறீர்கள்.என்று பட்டியலிடுங்கள்.அவற்றில், உடல்நலத்துக்கு ஒவ்வாதவற்றை குறைத்துக்கொள்ளுங்கள்.

**15. ஒரேநாள் மாற்றம் வேண்டாம்**

உணவுப் பழக்கத்தை ஒரேநாளில் அதிரடியாக மாற்றாதீர்கள். அது படிப்படியாக நடக்கட்டும்.

**16. சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்**

"ஷொப்பிங்" செல்லும்போது சாப்பிட்டு விட்டே செல்லுங்கள். அதன்மூலம், " ஷொப்பிங்மால்" களில் உள்ள ரெஸ்ட்ராண்டுகளில் உடல்நலத்தைப் பாதிக்கும் உணவுகளை கொறிப்பதைத் தவிர்க்கலாம்.

**17. கட்டுப்பாடு தொடரட்டும்**

நீங்கள் 'டயட்' டில் இருக்கும் வேளையில் நண்பர்கள், விருந்தினர்களுடன் விருந்து சாப்பிடநேரலாம். நமது 'விரதம்' முடிந்து விட்டதே, இனி என்ன இருக்கிறது? என்ற விரக்தியில் கன்னாபின்னாவென்று சாப்பிடத் தொடங்காமல், மறுநாளே கட்டுப்பாட்டுக்குத் திரும்பிவிடுங்கள்.



**18. 'முன்னோர் வழி' உதவும்**

நமது முன்னோர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு என்ன சாப்பிட்டார்கள் என்று ஆராய்ந்து அவற்றை உண்பது நல்லது.

**19. சரியான நேரத்தில் சாப்பிடுங்கள்**

சரியான நேரத்தில் சாப்பிடாததும், சாப்பாட்டைத் துறப்பதும்தான் இதய நோய்கள், அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்றவற்றுக்குக் காரணம் என்பதை உணருங்கள்.

**20. பழரசங்கள் தண்ணீருக்கு மாற்றாகாது**

பழசரங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதுதான்.அதற்காக அது தண்ணீருக்கு மாற்றாகாது.

**21. 'விற்றமின்' மாத்திரைகள் வேண்டாம்**

மருத்துவர் பரிந்துரைக்காமல், நீங்களாக விற்றமின் மாத்திரைகளைச் சாப்பிடாதீர்கள். சுயமருத்துவம் எப்போதுமே ஆபத்துதான்.

**22. மன உறுதியும் முக்கியம்**

நீங்கள் மனோரீதியாக உறுதியாக இருந்தால் தான் உடற்பயிற்சியிலும் கவனம் செலுத்த முடியும்.அதிலிருந்து நற்பலன் பெறமுடியும்.

**23. ' வார்ம் அப்' அவசியம்**

உடற்பயிற்சிக்கு முன்' வார்ம் அப் பயிற்சி அவசியம். தசைகள் குளிர்ந்த நிலையில் திடீரென்று பயிற்சி செய்தால் தசைக் காயமும், மூட்டு வலியும் ஏற்படக் கூடும்.

**24.படியேறுவது தீர்வாகாது**

மாடிப்படியில் ஏறிச் செல்வது என்பது உடற் பயிற்சிக்கு மாற்றாகாது. அதனால் மூட்டு காய அபாயம் ஏற்படலாம்.

**25. புதுமுயற்சி பலன் தரும்**

உடல் நலன் காக்க உடற்பயிற்சி தான் பலன் தரும் என்பதில்லை. ஏதாவது ஒரு விளையாட்டு அல்லது நடனம் கூட நல்லதே.

## சிறைச்சாலை சம்பவத்தால் 20 இலட்சம் ரூபா நட்டம்

(கொழும்பு)

அநுராதபுர சிறையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தினால் சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான சிறைச்சாலை சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த 25 பேர் அநுராதபுர போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றவர்களுக்குள் 8 சிறைச்சாலை அதிகாரிகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் காயமடைந்தவர்களில் நான்கு பேர் மோசமான நிலைமையில் இருப்பதாகவும் அவர்களுள் ஒருவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளதாகவும் அநுராதபுர வைத்தியசாலைத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இரண்டு தமிழர்களும் 6 சிங்களக் கைதிகளும் கடந்த வாரம் முதல் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் அவர்களுடன் மேலும் 50 பேர் இணைந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஸ்ரீ அம்மா பகவான் பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அடியார்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் அருள் ஆசியினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3)

## சுற்றாடலை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

சுற்றாடலை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடுகளும், ஒவ்வொரு நபரும் சுற்றாடலை பாதுகாப்பதற்கு முனைப்புக் காட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உரிய முறையில் சுற்றாடல் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாவிட்டால் மனிதர்கள் மட்டுமன்றி இந்த உலகில் எந்தவொரு ஜீவராசியும் வாழ முடியாத நிலைமை ஏற்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 1997 ஆம் ஆண்டு கைச்சாத்திடப் பட்ட கியாட்டோ உடன்படிக்கையை பல நாடுகள் சரியான முறையில் அமுல்படுத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. சூழல் மாற்றம், உலகம் வெப்பமாதல், லாநிணா , அல்நினோ போன்ற பல்வேறு அனர்த்தங்களும் சுற்றாடல் மாசடைந்தமையினால் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## போலிக் கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்ல முயன்றோர் சென்னையில் கைது

(கொழும்பு)

சென்னையில் இருந்து போலிக் கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்ல முயன்ற இலங்கையர்கள் இருவர் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த மகேஸ்வரன் (வயது -30), வவுனியாவைச் சேர்ந்த சுதேசிகரன் (வயது 23) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் இவர்களிடம் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா?

10



**நாம் அடைந்தது என்ன?**

கடந்த 62 வருடங்களாக இலங்கை இலவசக் கல்வி முறைமையைக் கொண்டுள்ளது. உயர் எழுத்தறிவு மற்றும் சுகாதார வசதிகள் காரணமாக இலங்கையின் மனித அபிவிருத்திச் சுட்டெண் 70 இற்கு மேல் உயர்ந்துள்ள போதிலும் ஒரு விரிவடையும் பொருளாதாரத்திற்குத் தேவையான விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். ஆனால் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலிருந்து பெருந்தொகையான பட்டதாரிகள் வெளிவருகின்றனர். இவர்களில் கூடிய வீதத்தினர் கலைப்பட்டதாரிகளே. ஆனால் அவர்களிடம் முற்றிலும் தொழிற்திறன்கள் இல்லாத காரணத்தினால் வேலைக்கு அமர்த்தப்படமுடியாத நிலை காணப்படுகிறது. இந்நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் பொருளாதாரரீதியாகச் சகல ஆசிய நாடுகளையும் விஞ்சியிருந்தது. ஆனால் தற்போது இதன் நிலை என்ன? அவை எல்லாவற்றையும் விடப்பின்தங்கியுள்ளது.

எமது சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கினால் கட்டொழுங்கு மறைந்து கொண்டே செல்கிறது. சகல மட்டங்களிலும் ஊழல் நிறைந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் குற்றங்களும் வன்முறைகளும், தற்கொலைகளும்அதிகரித்துக் காணப்படுவதுடன் கொலை, கொள்ளை, மனித உரிமை மீறல்கள், றவுடித்தனம், அடாவடித்தனம், கடத்தல், கப்பம் கேட்டல் போன்ற இன்னோரன்ன ஏற்றுக்கொள்ள முடியாத மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட செயற் பாடுகளும் இடம்பெற்றுக்கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் விரக்தியும் வெறுப்பும் காணப்படுவதுடன் அவர்கள் பிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரரீதியாக நாடு சீர்குலைந்து அதலபாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. தேசபக்தி மறைந்து போய்விட்டது. இனப்பிரச்சினைக் குரிய தீர்வுக்கு இன்னும் விடிவு ஏற்படவில்லை.

> "கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான , கட்டொழுங்குள்ள, தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்"

காலங்காலமாக அறிமுகப்படுத்தப்பட்ட கல்விக் கொள்கைகள், கல்விச் சீர்திருத்தங்கள் அடிப்படைக் கல்வி வாய்ப்பினை எல்லோருக்கும் உறுதிப்படுத்தியிருக்கலாம். ஆனால் ஒழுக்கமும் நேர்மையும் கொண்ட சமூகத்தை உருவாக்கத் தவறிவிட்டன. கல்வியில் உன்னதம், சமத்துவம் ஆகியவற்றை வலியுறுத்திய சீர்திருத்தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகச் சின்னாபின்னப்படுத்தப்பட்டு விட்டன. சமூக பொருளாதார அபிவிருத்திக்கும், தேசிய இனங்களுக்கிடையிலான இசைவாக்கத்துக்கும் பங்களிப்புச் செய்யவும் தவறி விட்டன.

இலங்கையை மீட்டெடுக்க, ஆசியாவின் அதிசயிக்கத்தக்க நாடாக்க உண்மையிலேயே ஈடுபாடு கொண்டிருந்தால் உடனடியாக இந்நிலைமை மாற்றப்படவும், நிவர்த்தி செய்யப்படவும் வேண்டும். இதற்கான ஒரே உத்தி உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்தலே ஆகும். இதனைத் தீர்மானிக்கின்ற முக்கிய காரணி சிறந்த கல்வியாகும். அத்தகைய கல்வி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதான ஒழுக்கமும் நேர்மையும், தேசபக்தியும் நிறைந்த பிரசைகளை உருவாக்கக் கூடியதான கல்வி முறைமையாகும்.

இலங்கை இயற்கையினால் ஆசீர்வதிக்கப்பட்ட நாடாகும். எல்லாவற்றுக்கும் மேலாக எழுத்தறிவு உயர்வாகக் கொண்ட மனித வளத்தைக் கொண்டது. உண்மையில் எம்மிடம் இல்லாதது என்ன? எம்மிடம் இல்லாதது கட்டொழுங்கும் தேசபக்தியும் தான். இவை இருக்க வேண்டுமெனின் எமது வளங்களிலிருந்து உச்சமான உற்பத்தித்திறனைப் பெறக்கூடிய வகையில் ஒரு நேர்த்தியான அரசியல் தலை யீடற்ற ஒரு புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டு எமது வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெறக்கூடியதான உன்னதம், சமத் துவத்தை அடைய இனிமேலாவது முழுமுயற்சி எடுக்கப்பட வேண்டும்.

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
**முன்னாள் அதிபர்**
**பலாலி ஆசிரியர் கலாசாலை**

(முற்றும்)

# "ஸ்பெஷல்" நாடகம்; சில சிந்தனைகள்

3



இசைநாடக சங்கீதத்தை ஈழத்து கலைஞர்கள் பயில்வதில் அதிக சிரமத்தை எதிர் கொள்ள வேண்டியிருக்கவில்லை. சங்கரதாஸ் சுவாமிகள் தமது நாடகப் பிரதிகளில், தாம் யாத்த நாடகப் பாடல்களுக்கான இராகங்களைக் குறிப்பிடும்போது, அப்பாடல்கள் என்ன 'மெட்டில்' அமைந்தவைஎன்பதையும் அழுத்தமாகக் குறிப்பிட்டார். முன்னைய நாடகமொன்றில் இடம்பெற்ற பாடல்களின் மெட்டுக்களில் பின்னைய நாடகங்களிலும் பாடல்களை இடம்பெறச்செய்து, அம்மெட்டுக்களையும் இராகங்களையும் பாடல்களினூடாகவே பயில வழிசெய்தார். இராகத்தின் பெயரை, அதன் தன்மையை, பூரணமாக வரன்முறையான சங்கீதத்தினூடாக அறிந்து கொள்ளாத நிலையிலும்கூட மெட்டுக்களின் பயில்வினூடாக, புதிய பாடல்களைப் பாடுவதென்பது ஈழத்துக் கிராமிய இசை நாடகக் கலைஞர்களுக்கு எளிதாயிற்று. ஈழத்து கிராமியக்கலைஞர்கள் பலர் சிறந்த பாடகர்களாக விளங்கியமையால், இசை நாடகப் பாடல்களை தென்னிந்தியக் கலைஞர்களைப்போன்று சிறப்பாகவே பாடினார். இன்றும் இசை நாடகங்கள் பேணப்பட்டு மேடையேற்றப்பட்டு வருவதற்கு மெட்டுக்களில் அமைந்த பாடல்களைப் பாடும் இந்த இசைமரபுத் தொடர்ச்சியே காரணமாக இருந்து வந்திருக்கிறது. இதனையே, இசைநாடக மேடைப்பாடல்களை, சுருதி சுத்தமாக, லயம் பிசகாமல் பாடக்கூடிய புதிய பல இசை நாடகக் கலைஞர்கள் காலத்திற்குக் காலம் உருவாகி வருகின்றார்கள்.

சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடக வரலாறும், அவ்வரலாற்றுப்போக்கில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகளின் காலவரிசைக் கிரமம் குறித்த தெளிவும், இசை நாடக வரலாற்றை விளங்கிக் கொள்வதற்கு அவசியமானது. இதே போல, ஈழத்தில் இசை நாடகத்தின் வளர்ச்சிப் போக்கை அறிந்து கொள்வதிலும் இசை நாடகத்துக்கு பங்களிப்புச் செய்த முக்கிய ஈழத்து இசைநாடகக் கலைஞர்களின் வரலாற்று மூலங்களை பதிவு செய்து கொள்வதிலும் இக்கால வரிசைக்கிரமம் தெளிவாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட இசை நாடக காலவரலாற்றை போதிய சான்றாதாரங்களின்றி ஆண்டுகளையும் குறிப்பிட்டு எழுத முயன்றமையே, இசை நாடக வரலாறு பற்றிய குழப்பங்களுக்கு முதன்மைக்காரணியாக அமைந்தது என்பதையும் இசைநாடக வரலாற்றாய்வாளர்கள் இவ்விடத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

**ஸ்பெஷல் நாடக மரபின் தோற்றம்**

தமிழக இசை நாடகக்குழுக்கள் பல கம்பனிகளாக உருவாகி இசை நாடகங்களை மேடையேற்றி வந்த வேளை, தமது இருப்புக்காக பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்த வேளையில் உருவானவையே 'ஸ்பெஷல்' நாடகங்களாகும். இதன்பேறாக இசைநாடக அரங்கு 'ஸ்பெஷல் நாடக அரங்காக' பரிணமிக்கும் நிலை உருவாயிற்று.

பேர்பெற்ற நடிகர்களை - அவர்கள் வெவ்வேறு கம்பனிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும்–ஒன்று கூட்டி, பரிச்சயமான நாடகங்களை மேடையேற்றிய போது, இந்த நடிகர்கள் ஒவ்வொருவரும் 'ஸ்பெஷலாக' அழைக்கப்பட்டவர்கள் என்ற வகையிலேயே அந்நாடகங்கள் 'ஸ்பெஷல் நாடகங்கள்' என சூட்டப்பெற்றன. ஒவ்வொரு பாத்திரங்களுக்குமெனப் பிரபல நடிக, நடிகையர்களை நடிக்கச் செய்ததோடு மாத்திரமல்லாமல் பின்னணி இசைக்கருவிகளை இசைப்பதற்கும் கூட பிரபல வித்துவான்கள் அழைக்கப்பட்டனர். இந்தப்பின்னணியில் 'ஸ்பெஷல் நாடக மேடைகள்' அப் பிரபல கலைஞர்களிடையே நிகழும் 'போட்டிக்கான' களங்கள் ஆயின.

வசூல் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட 'ஸ்பெஷல்' நாடகங்கள் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தபோதிலும் நாடக கதையம்சத்திலிருந்து ஸ்பெஷல் நடிகர்கள் விலகிச் சென்றவேளை கதையம்சத்தை நினைவுபடுத்தவேண்டிய நிலையும் தமக்கு உருவானதைக் கண்டு ரசிகர்கள் விசனித்ததனாலேயே 'ஸ்பெஷல்' நாடகப் பாணி தமிழகத்தில் செல்வாக்கு இழக்கக் காரணமாயிற்று. செல்வமும் செல்வாக்கும் மிகுந்த பெரிய நடிகர்கள் தாம் ஏற்றுள்ள பாத்திரங்களுக்குரிய வரம்புகளை மீறிச் சகநடிகர்களை மேடையிலே இழித்துப் பழித்தும் பேசி கைதட்டல் பெறுவதும் சற்றுத் திறமை குறைந்தவர்களை அவமானத்துக் குள்ளாக்குவதும் ஸ்பெஷல் நாடக மேடைகளில் அன்றாட நிகழ்ச்சிகளாயின.

இசைநாடக மரபு 'ஸ்பெஷல் நாடக அரங்காக' ஈழத்தில் உருவாக்கம் பெற்ற வேளை ஈழத்து இசைநாடகக் கலைஞர்கள் தமது சங்கீத அறிவை விருத்திசெய்ய வேண்டிய தேவையை உணர்ந்தனர். இதனால் வரன்முறையாக சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளவும் முயன்றனர். நடிகமணி வைரமுத்து, எம்.பி.அண்ணாசாமி, எஸ்.தம்பி ஐயா, கே.வி.நற்குணம் முதலான ஈழத்துக் கலைஞர்கள் உள்ளூர் சங்கீத வித்துவான்களிடம் மாத்திரமன்றி, தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த சங்கீத வித்துவான்களிடமும் குறுகிய காலத்திற்கேனும் சங்கீதத்தை வரன்முறையாகப் பயின்றனர். தமிழகத்தில் வரன்முறையான சங்கீத அறிவுபெற்ற கலைஞர்கள் இசைநாடக அரங்கை ஆட்சிசெய்து சங்கீத விற்பன்னம் செய்து, இசைநாடக வரம்பை மீறிய வேளை, ஈழத்துக் கலைஞர்கள் 'ஸ்பெஷல்' நாடகமரபை வளமாக்க வரன்முறையான சங்கீத அறிவை நாடிச் சென்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

மற்றுமொரு சிறப்பம்சத்திலும் ஈழத்து ஸ்பெஷல் நாடக மரபு தமிழக ஸ்பெஷல் நாடக மரபிலிருந்து வேறுபட்டு நிற்பதை துலாம்பரமாக எடுத்துக்காட்டமுடியும். அந்நாளில் சங்கரதாஸ் சுவாமிகளால் இயற்றப் பெற்ற பாடல்கள் அநேகமாக ஸ்பெஷல் நாடக நடிகர்களினால் பாடப்பட்டுவந்த வேளை மேடையில் நிலவிய 'போட்டி நிலை' காரணமாக புதிய பாடல்களையும் திடீர் திடீரென மேடைகளில் பாடவேண்டிய தேவை நடிகர்களுக்கு ஏற்பட்டது. இதனால் தமிழக ஸ்பெஷல் நடிகர்கள் நல்ல கவிவாணர்களிடமிருந்து பாடல்களைப் பெற்றுச்சென்று மேடைகளில் பாடிவந்தனர். சங்கரதாஸ் சுவாமிகளைத் தொடர்ந்து பல்லாண்டுகள் நாடகமேடையில் துலங்கிய மதுரகவி பாஸ்கரதாஸ் அவர்களிடமிருந்து அக்காலத்துப் புகழ்பெற்ற ஸ்பெஷல் நடிகர்களாக விளங்கிய சுப்பையா பாகவதர், நாகசாமி பாகவதர், சாது சுப்பிரமணிய பாகவதர் முதலாயோர் ஸ்பெஷல் நாடகங்களில் பாடவென்றே பாடல்கள் வாங்கிச் சென்றனர்.

ஆனால் தமிழக ஸ்பெஷல் நடிகர்கள் போலல்லாமல், ஈழத்து ஸ்பெஷல் நாடக மரபில், ஸ்பெஷல் நடிகர்கள் தாமே தமது கவித்துவ ஆற்றலை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாமெனச் சிந்தித்தனர். ஈழத்தின் பிரபல ஸ்பெஷல் நடிகரான கிருஷ்ணாழ்வார், கலைஞர் எஸ்.தம்பிஐயா, எம்.பி.அண்ணாசாமி ஆகியோர் இக்கவித்துவ ஆற்றல்களைப் பிறவிற்பன்னர்களிடமிருந்து கற்றுத்தேர்ந்தனர். இவர்கள் மூவருமே சமரகவி பாடுவதிலும் வல்லவராயினர். தாம் இயற்றிய சமரகவிகளையும் கூட நாடகப்பாங்கில் கண்முன் விரியும் காட்சிகளாய் அமைத்தமை இவர்களின் சிறப்பாகும்.

**கலாநிதி த.கலாமணி**
**யாழ்.பல்கலைக்கழகம்**

(தொடரும்)

# பொன்சேகாவின் மருந்துச்சிட்டையை வழங்குமாறு அனோமா கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உடல் நலக் குறைவை கவனத்தில் கொண்டு இராணுவ வைத்தியசாலையில் இருக்கும் அவருக்கு தேவையான மருந்துகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய கோவையை தம்மிடம் வழங்குமாறு அனோ மா பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற சேனக்க டி சில்வாவின் பிணை மனு மீதான விசாரணைகளின் பின்னர் சரத் பொன்சேகாவின் உடல் நலம் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அனோமா பொன்சேகா இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

பொன்சேகாவின் தலையிலும் குண்டுதுகள் ஒன்று இருப்பதாகவும் அது அடிக்கடி இடம்மாறி வருவதால் அதனை குணப்படுத்த இராணுவ வைத்தியசாலையில் வழங்கப்பட்ட மருந்தை தமக்கு பெற்றுத் தருமாறு தற்போது பொன்சேகாவுக்கு சிகிச்சையளித்து வரும் மருத்துவர்கள் தன்னிடம் கேட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டு வரும் மருந்து அவருக்கு தாங்கி கொள்ள முடியாத நிலைமையில் இருப்பதால் அவருக்கு முன்னர் வழங்கப்பட்ட மருந்தின் பெயரை அறிந்துகொள்ள இராணுவ வைத்தியசாலையிடம் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கு எந்த பதிலும் அளிக்கப்படவில்லை எனவும் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இந்தியாவுடன் உச்சளவு பரஸ்பர உறவுகளைப் பேண நடவடிக்கை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடனான உச்சளவு பரஸ்பர உறவுகளைப் பேண நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்திய மீனவர் பிரச்சினைகள் குறித்து கூடுதலான கவனம் செலுத்தப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களை தாக்குவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து பூரணமான தரவு களை வழங்குமாறு இராஜதந்திர வழிகளில் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி மற்றும் 23ஆம் திகதி ஆகிய தினங்களில் இந்திய மீனவர் களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியதா கவும் அதில் இருவர் கொல்லப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் விசா ரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு கடற்படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து 100 பஸ்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானம்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இந்தியாவிலிருந்து புதிதாக 100 பேருந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் ஆலோசனையின் பிரகாரமே இந்த பேருந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்து சேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையின் கீழ் 100 பேருந்துகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேருந்து ஒன்றின் பெறுமதி 40 இலட்சமாகு மெனவும் இதற்கான செலவு இலங்கை போக்குவரத்துச் சபையினால் ஈடுசெய்யப்படும் என்பதுடன் இந்த பேருந்துகள் தூரப்பிரதேசங்களுக்கான சேவைகளில் ஈடுபடுத்தப்படும் என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சுகாதாரம் குறித்த விடயங்களை அரசியல் மயப்படுத்தாதீர்கள்

## சுகாதார அமைச்சர் கோரிக்கை

சுகாதார விடயங்களை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட தேசிய சுகாதாரக் கொள்கைகள் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களினால் தோல்வியடைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுகாதாரக் கொள்கைகளில் ஏற் படும் வீழ்ச்சி முழு நாட்டையுமே பாதிக்கும் எனவும் ருபெல்லா போன்ற நோய்களை தடுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் தடை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சந்ததியினரும் எதிர்கால சந்ததியினரும் பயனடையக் கூடிய வகையில் அரசாங்கம் சுகாதார திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விபத்தில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் நண்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டைத்தரிப்பைச் சேர்ந்த எஸ்.தெய்வேந்திரம் (வயது 63) என்பவரே கை மற்றும் காலில் காயமுற்ற நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார். (ஸ்ரீ)




★1340 - இங்கிலாந்து மன்னன் மூன்றாம் எட்வர்ட் பிரான்சின் மன்னனாக அறிவிக்கப்பட்டான்.

★1500 - விசெண்ட் யானெஸ் பின்சோன் பிரேசில் நாட்டில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.

★1531 - போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

★1565 - கர்நாடகா மாநிலத்தின் தலைக் கோட்டை என்ற இடத்தில் விஜய நகரப் பேரரசுக்கும் இஸ்லாமிய தக் காணத்து சுல்தான்களுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் கடைசி இந்துப் பேரரசு தோல்வி கண்டது. இத்தோல்வி இந்தியாவின் பெரும் பகுதி இஸ்லாமியரின் கட்டுப் பாட்டுக்குள் வரக் காரணியாய் இருந்தது.

★1788 - ஆர்தர் பிலிப் தலைமையில் பிரித்தானியக் கைதிகளின் முதலாவது தொகுதியைக் கொண்ட கப்பல் சிட்னியை அடைந்து புதிய குடியேற்றத்தை ஆரம்பித்தனர். இது அவுஸ்திரேலிய நாளாகக் கொண்டாடப்படுகிறது.

★1837 - மிச்சிகன் ஐக்கிய அமெரிக்காவின் 26வது மாநிலமாக இணைக்கப்பட்டது.

★1841 - ஐக்கிய இராச்சியம் ஹொங் கொங்கை அதிகாரபூர்வமாக ஆக்கிரமித்தது.

★1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானா மாநிலம் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.

★1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்தது.

★1924 - சென் பீட்டர்ஸ்பேர்க் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★1926 - ஜோன் லோகி பெயர்ட் தொலைக்காட்சிப் பெட்டியைக் காட்சிப்படுத்தினார்.

★1930 - இந்திய தேசியக் காங்கிரஸ் ஜனவரி மாதம் 26ஆம் திகதியை இந்தியாவின் விடுதலை நாளாக (பூரண சுயராஜ்ய நாள்) அறிவித்தது.

★1942 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படையினர் முதற் தடவையாக ஐரோப்பாவை (வட அயர்லாந்து) அடைந்தனர்.

★1949 - அவுஸ்திரேலியக் குடியுரிமை முதன்முறையாக வழங்கப்பட்டது.

★1950 - இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரவாத் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.

★1952 - பிரித்தானிய மற்றும் எகிப்திய உயர் வகுப்பு வர்த்தகர்களுக்கெதிராக எகிப்தில் இடம்பெற்ற வன்முறைகளில் கெய்ரோ நகரத்தின் நடுப்பகுதி தீயினால் சேதமாக்கப்பட்டது.

★1958 - ஜப்பானிய பயணிகள் கப்பல் தெற்கு அவாஜி தீவில் மூழ்கியதில் 167 பேர் கொல்லப்பட்டனர்.

★1962 - ரேஞ்சர் 3 விண்கலம் சந்திரனை ஆராய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும் இத் தளவுளவி 22ஆயிரம் மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.

★1965 - இந்தி இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியானது.

★1980 - இஸ்ரேலும் எகிப்தும் தூதரக உறவை ஆரம்பித்தன.

★1983 - லோட்டஸ் 1-2-3 வெளியிடப்பட்டது.

★1992 - ரஷ்யாவின் அணுவாயுத ஏவுகணைகள் ஐக்கிய அமெரிக்க நகரங்களை நோக்கி செலுத்தப்படமாட்டா என ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் அறிவித்தார்.

★2006 - வெஸ்டர்ன் யூனியன் நிறுவனம் தொலைத்தந்தி மூலமான தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.

### பிறப்புகள்

★1904 - சோன் மக்பிறைட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1988)

★1911 - பொலிக்காப் கூஷ், நோபல் பரிசு பெற்றவர் (இ.1993)

★1921 - அகியோ மொறிடா, ஜப்பானியத் தொழிலதிபர் (இ.1999)

★1977 - வின்ஸ் கார்டர், அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

★1823 - எட்வர்ட் ஜென்னர், ஆங்கிலேய மருத்துவர், அம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர் (பி.1749)

★1895 - கெய்லி, கணிதவியலர் (பி. 1821)

★1964 - தோமஸ் அடிகள், யாழ்ப்பாணம் தோலகட்டி ஆசிரம சுமாமிகள் (பி. 1886)

2008 - ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீன ஜனாதிபதி (பி. 1926)

**2001 - குஜராத் நிலநடுக்கத்தில் 20ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட் டனர்.**



# பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

## இலங்கை பொலிஸ்

**மக்களுடன் சிநேகபூர்வமான, தொழில்ரீதியான, கௌரவமான பொலிஸ் உத்தியோகத்தராக பயிற்சியளித்து நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு எம்முடன் ஒன்றுபடுமாறு தங்களை அழைக்கும் அழைப்பே இது.**

கீழ்வரும் பதவிகட்காக திருமணமாகாத இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | தகைமைகள் |
|---|---|
| உதவி பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை 18-28 வயதிற்குள்<br>உயரம் 05 அடி-06 அங்குலம்/மார்பு 32 அங்குலம்.<br>கல்வி- க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த (உ/தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும். |
| பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் | வயதெல்லை 18-28 வயதிற்குள்<br>உயிரம் 05அடி 04 அங்குலம்.<br>கல்வி-க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த (உ /தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை 18-28 வயதிற்குள்<br>உயரம் 05 அடி- 04 அங்குலம் / மார்பு 30 அங்குலம்,<br>கல்வி- க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| பெண் பொலிஸ் கொஸ்தாபல் | வயதெல்லை 18-28 வயதிற்குள்<br>உயரம் 05 அடி-02 அங்குலம்.<br>கல்வி-க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந் திருந்தல் வேண்டும். இரு தடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருந்தல் வேண்டும். |
| பொலிஸ் கொஸ்தாபல் சாரதி | வயதெல்லை 19-28 வயதிற்குள்<br>உயரம் 05 அடி-03 அங்குலம் / மார்பு 30 அங்குலம்<br>கல்வி கா.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், தாய் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இருதடவையில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வாகனம் ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது 01 வருடத்திற்கு மேட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

*கீழ்குறிப்பிட்ட பரீட்சைகள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம், கண்டி, குருணாகல், பதுளை, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறும்.*

*01. முதலாவது பரீட்சை*

*02. மனோவலிமை பரீட்சை*

*03. எழுத்துப் பரீட்சை*

**விண்ணப்பங்கள் பாரம் எடுக்கும் கடைசித் திகதி 25.02.2011**

*மேலதிக தகவல்களுக்கு 24.12.2010 ஆம் திகதிய அரச வர்த்தமானி இலக்கம் 1686ஐ பார்க்கவும்.*

**மேலதிக உசாவுதல்: *011-2552736, 011-2552861, 011-2585524, 011-2552953***

**பணிப்பாளர்/ பொலிஸ் ஆட்சேர்ப்பு காரியாலயம்**

**இல.375, ஹெவலக் றோட்,**

**கொழும்பு-06**

---

*மாதிரி விண்ணப்பப் படிவம்*

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

### பதவி-உதவி பொலிஸ் பரிசோதகர்/ பெண் உதவி பொலிஸ் பரிசோதகர்

### பொலிஸ் கொஸ்தாபல்/ பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

01. (அ) முழுப்பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின்/ விண்ணப்பதாரரியின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்.)
.................................................................................................
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) ...................................................
(இ விண்ணப்பதாரரின் பதவி ...................................................
02. தேசிய அடையாள அட்டை இலக்கம்..........................................................
(பிரதியை இணைக்கவும்)
03. தந்தையின் முழுப் பெயர்.......................................................................
04. விண்ணப்பதாரியின் பிறந்த இடம்..........................................................
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம்..................................................
மாகாணம் ..........................................................................
05. (அ) தற்போதைய முகவரி ..........................................................................
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம்........................................
(இ) நிரந்தர முகவரி ...................................................................
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம்..............................................
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் ...........................................
(ஊ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) ................ கையடக்க தொலைபேசி இல.........
06. (அ) தேசிய இனம்...........................................................................
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா? பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்
.................................................................................................
(இ வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும்.
1. விண்ணப்பதாரர் ..........................................
2. விண்ணப்பதாரரின் தந்தை ..........................................
3. விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் ..........................................
4. விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன்..........................................
07. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி ..........................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு)
வருடங்கள்............ மாதங்கள் ............. நாட்கள்..............................
08. உயரம்: அடி.......................... அங்குலம்..............................
உதவி பொலிஸ் பரிசோதகர் மட்டும் மார்பு/உதவி பொலிஸ் கொஸ்தாபல் மட்டும் மார்பு அங்குலம்.......................................................................
09. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
.................................................................................................
10. மேலதிக தகைமைகள் உண்டா? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
.................................................................................................
11. திருமணம் ஆனவரா? ஆகாதவரா? ..................................................
12. (அ) தற்போது செய்யும் தொழில்..................................................
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா?. ..................................
13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா? .............. ..............
14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக.
(அ)................................................. (ஆ).................................................
15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா?
ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக. ..........................................
(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உபசேவையில் சேவை செய்துள்ளீரா?
ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
.................................................................................................
16. நீங்கள் தற்போது பொலிஸ் உபசேவையில் சேவை செய்கிறீர்களா? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவி நிலை போன்ற விபரங்களின் பிரதியை இணைக்குக.
.................................................................................................
17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பவேண்டும்.
(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.
18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.
(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கபட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.
19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக.
20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் எந்தச் சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

............................ ............................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு:- **மேற்குறிப்பிட்ட பதவிநிலைகளுக்கு விண்ணப்பிக்கும் போது பதவிப் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவத்தினை தயார் செய்தல் வேண்டும்.**

# முதல்வர் பதவியிலிருந்து விலகும் முடிவை விரைவில் அறிவிப்பேன்



## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தமிழக முதல்வராக இருப்பதைக் காட்டிலும் தி.மு.க. தலைவராக இருப்பதையே விரும்புகிறேன் என்று முதல்வர் கருணாநிதி கூறினார். இதற்கான முடிவை விரைவில் அறிவிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அறநிலையத் துறை அமைச்சர் பெரிய கருப்பனின் இல்லத் திருமண விழா, சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. திருமணத்தை நடத்தி வைத்து முதல்வர் கருணாநிதி கூறியதாவது,

தமிழகத்தின் அப்போதைய பிரிமியராக இருந்தவர் பனகல் அரசர். அவர் ஆட்சி புரிந்த காலத்தில் நிறுவப்பட்டதுதான் இந்து அறநிலையத் துறை. ஆலயங்களுக்கு வருகின்ற காணிக்கை ஒழுங்காகச் செலவிடப்படுகிறதா, திருவிழா, தெப்ப உற்சவ விழாக்களில் செலவழிக்கப்படும் பணத்துக்கு ஒழுங்கான கணக்கு இருக்கிறதா, தினம் தினம் ஆலயத்துக்கு ஆகின்ற செலவுக்கு, ஆலயப் பணியாளர்களின் ஊதியங்களுக்குக் கணக்கு இருக்கிறதா என ஆராய்ந்து, ஊழல் வரா மல் பார்த்துக்கொள்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது பனகல் அரசரின் ஆட்சி.

தமிழகம் மேலும், மேலும் வளம்பெற வேண்டும். மாநிலத்தில் இன்னும் பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். தமிழகத்திலே தி.மு.க.ஆட்சி தொடர்ந்து இருந்து மக்களுக்கான பணிகளை ஆற்றிட வேண்டும் என்கிற ஆசை அமைச்சர் பெரிய கருப்பனுக்கு உண்டு. அதனால் தான், இங்கே அவரை அமைச்சர் என்று அழைத்தபோது காட்டப்பட்ட ஆர்வத்தைவிட மாவட்டச் செயலாளர் எனக் கூறிய போது அதிக ஆர்வத்தை காட்டினீர்கள்.

எனக்குக்கூட அப்படியொரு ஆசை இருக்கிறது. முதலமைச்சர் என்று சொல்லும் போது, நீங்கள் இவ்வளவு பேரும் ஆர்வமாக இருப்பீர்களா அல்லது தி.மு.க. தலைவர் என்று சொல்லுகின்ற நேரத்தில் ஆர்வமாக இருப்பீர்களா என்றுகேட்டால், தலைவர் என்று சொல்வதில்தான் ஆர்வமாக இருப்பீர்கள். ஆகவே, நான் அந்த முடிவுக்கே விரைவில் வருவேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கருணாநிதி பேசினார்.

முதல்வர் பதவியில் இருந்து விலகும் முடிவை விரைவில் அறிவிப்பேன் என்று கருணாநிதி கூறியபோது, கட்சியின் மூத்த தலைவர்கள் அன்பழகன், ஆர்க்காடு வீராசாமி ஆகியோர் மேடையில் இருந்தனர். முதல்வரின் மகன்கள் மு.க. ஸ்டாலின், அழகிரி ஆகியோரும் மேடையில் இருந்தனர்.

கடந்த ஆண்டு செம்மொழி மாநாட்டுக்கு முன்பாக நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் கருணாநிதி, ' மாநாட்டுக்குப் பின் உங்களோடு இணைந்து பணியாற்றுவேன்" என்று தெரிவித்தார். இதையடுத்து மாநாட்டுக்கு பின் முதல்வர் பதவியில் இருந்து விலகி அவரது மகன் மு.க.ஸ்டாலின் பொறுப்பை ஏற்பார் என எதிர் பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் கட்சித்தலைவர் பதவி மட்டுமே என்ற நிலையை கருணாநிதி எடுத்திருப்பது மூலம் தமிழகத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் யார் முதல்வர் என்ற விவாதம் அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது. (ஸ்ரீ-2)

## மீனவர்களுக்கு ஆயுதம் வழங்குமாறு பழ.நெடுமாறன் கோரிக்கை

தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி துப்பாக்கி வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் 1983 முதல் இலங்கைக் கடற்படையினரால் 400க்கும் அதிகமான தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சோமாலியாவில் கடற்கொள்ளையர்களை ஒடுக்க இந்தியப் படை அனுப்பப்படுகிறது. ஆனால், நமது கடலில் நமது மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதைத் தடுக்காமல் வேடிக்கை பார்க்கிறது. தமிழக மீனவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு துப்பாக்கி வழங்கினால் மட்டுமே இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம், வங்கி, அதிகாரிகள் வீடுகளுக்கு பலத்த பாதுகாப்பு போட்டப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் கென்னத் லேனில் இலங்கை அரசு நிதியுதவியுடன் செயற்படும் இலங்கை மகாபோதி சங்கத்தின் சென்னை மையம் உள்ளது. இங்கு புத்தர் கோயிலும் இருக்கிறது. வாரத்தில் ஒருநாள் பூஜையும் தியான வகுப்பும் நடைபெறும். புத்தர் பிறந்தநாளில் பிரமாண்டமான விழாவும் நடத்தப்படும். இலங்கை மற்றும் நேபாள நாட்டைச் சேர்ந்த புத்த மதத்தினர் இந்த சங்கத்தில் வந்து தங்குவதுடன் வார ணாசி, கயா போன்ற ஆன்மீக தலங்களுக்குச் சென்று வருவார்கள்.

இந்தக் கோவிலின் முன்பகுதியில் உள்ள வராந்தாவில் நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் புத்த பிக்குகளான பிக் மைதிலி (வயது 50) , சமீத தொரோ (வயது 27), வஜ்ர தெரோ (வயது 70) உட்பட சிலர் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தனர்.


அப்போது வாயில் கதவைத் திறந்து கொண்டு அடையாளம் தெரியாத ஒரு கும்பல் நுழைந்தது. அவர்கள் யார்? என்ன வேண்டும்? என்று கேட்பதற்குள் அந்தக் கும்பல் கல்வீச்சு நடத்தியது. இதில், வராந்தாவில் இருந்து அலுவலகக் கண்ணாடி, ஷோக்கேசில் இருந்த கண்ணாடி, கோவிலுக்குள் நிறுத்தப்பட்டிருந்த வான் கண்ணாடிகள் உடைந்தன. தொலைக்காட்சியும் அடித்து நொறுக்கப் பட்டது.

இந்தத் தாக்குதலில் காயம் அடைந்த 3புத்த துறவிகளுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதல் தொடர்பாக 2 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம், வங்கி, அதிகாரிகள் வீடுகளுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மொஸ்கோ விமான நிலையத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## 31 பேர் பலி;130 பேர் காயம்



(மொஸ்கோ)

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவிலுள்ள விமான நிலையத்தில் நடைபெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 31 பேர் பலியானார்கள். 130 பேர் காயம் அடைந்தனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் டொமோடடோவோ விமான நிலையம் உள்ளது. ரஷ்யாவிலேயே அதுதான் மிகப் பெரிய விமான நிலையம். அந்த விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் வழியில் உடைமைகளை எடுத்துக் கொள்ளும் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகலில் பயங்கர குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் 31 பேர் பலியானார்கள். 130 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 20 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆங் காங்கே இரத்தம் தெறித்துக் கிடந்தது. விமான நிலையம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. உயிர் பிழைப்பதற்காக பயணிகள் அங்குமிங்கும் ஓடினர். விமான நிலையத்தின் ஒரு சுவரை விமான நிலைய ஊழியர்களே இடித்து பயணிகள் அவசரமாக வெளியேற வழி செய்தனர்.

2 தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் உடலில் கட்டிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து இத்தாக்குதலை நிகழ்த்தியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். பொலிஸாரும் அதே தகவலை தெரிவித்தனர். சம்பவம் பற்றி விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து ரஷ்யாவின் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஜனாதிபதி டிமித்ரி மெட்வடேவ் உத்தரவிட்டுள்ளார். பிரதமர் விளாடிமிர் புடினுக்கும் சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பையடுத்து ரஷ்ய பங்குச்சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டது. (ஸ்ரீ-2)

## "உணவுப் புரட்சி தேவை"

உலகின் பட்டினி அபாயத்தை நீக்க புரட்சிகர மாற்றங்கள் தேவையென உணவு உற்பத்தி குறித்து ஆராய பிரிட்டிஷ் அரசால் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு கூறியுள்ளது.

மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உலக மக்கள் அனைவருக்கும் உணவளிக்க வேண்டுமானால் , அடுத்த நாற்பது ஆண்டுகளில் உலகின் உணவு உற்பத்தி இரட்டிப்பாக வேண்டும் என்று 35 நாடுகளைச் சேர்ந்த 400 விஞ்ஞானிகளைக் கொண்ட இக்குழு கூறியுள்ளது. உற்பத்தி செய்யப்படும் உணவில் கணிசமான பகுதி வீணடிக்கப்படுவதாகவும் மரபணு மாற்றங்கள் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க முயல்வதை விட உணவு வீணாவதைத் தடுக்க கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று இந்த அறிக் கை கூறுகிறது. (ஸ்ரீ-2)


# விண்வெளியில் வேற்று கிரக மனிதர்கள் இல்லை


## நிபுணர்கள் கருத்து



அமெரிக்காவில் உள்ள ஹவார்ட் பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞானி ஹோவர்ட் அமித் வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதாகவும் அவர்கள் பூமிக்கு வந்து மனிதர்களை தாக்கும் சூழ்நிலை நிலவும் என்றும் கருத்து தெரிவித்து இருந்தார்.

இதற்கு விண்வெளி வீரர் ஒருவர் மறுப்பு தெரிவித்துள்ளார். விண்வெளியில் வேற்று கிரக மனிதர்கள் இல்லை. நாங்கள் மட்டுமே தங்கியிருந்து பரிசோதனை நடத்தி வருகிறோம். ஆனால் விண்வெளியில் பூமியைப் போன்று பல கிரகங்கள் உள்ளன. அங்கு மனிதர்கள் வாழமுடியாத சூழ்நிலை உள்ளது என்றார். (ஸ்ரீ)





கிளி/முருகானந்த மகா வித்தியாலயத்திற்கு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டார். இதன் போது பாடசாலை அதிபர் ரி.வரதனுடன் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதையும் பாடசாலை சமூகத்தினருடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்

# இவ்வாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் பெப்ரவரி 7 இல் ஆரம்பமாகவுள்ளன

(கொழும்பு)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் இவ் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆரம்பக் கல்வி, விவசாயம், இந்து சமயம், கிறிஸ்தவம், உடற்கல்வி, வணிகக்கல்வி ஆகிய பாட நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்தவர்கள் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு முன்னதாக பெற்றோர் பாதுகாவலருடன் சமுகம் அளிக்குமாறு பீடாதிபதி க.பேர்ணாட் அறிவித்துள்ளார்.

பதிவு செய்தவர்களுக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பதிவு செய்து கொண்டவர்கள் அழைப்புக் கடிதம் கிடைக்காதுவிடினும் பதிவின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக விடுதியில் தங்கி பயிற்சியை தொடர்வதற்கான ஆயத்தங்களுடனும் வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார்.

எவ்வறாயினும் பதிவு செய்து கொண்டவர்கள் ஏதேனும் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யத்திருப்பினும் அல்லது பதிவு செய்த பின் பதிவை இரத்து செய்திருப்பினும் அவர்கள் தேசிய கல்வியியற் கல் லூரிகளில் பயிற் சி நெறி ஒன்றை .தொடர்வதற்கு தகுதியை இழந்தவாகளாக கருதப்படுவர். எனவே பதிவு செய்தவர்கள் ஏற்கனவே ஏதேனும் பல்கலைக்கழகம் ஒன்றில் பதிவு செய்துள்ளார்கள் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுமிடத்து அவ்வாறானவர்களின் பதிவுகள் இரத்து செய்யப்பட்டு அவர்கள் பயிற்சி நெறியிலிருந்து நீக்கப்படுவதுடன் அவர்கள் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவீனத்தை பிணையில் குறிப்பிடப்பட்டதின் படி செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பதிவு செய்தவர்கள், பதிவு செய்து பின் இரத்து செய்து கொண்டவர்கள், திருமணமானவர்கள், ஏற்கனவே அரச சேவையிலுள்ளோர், தற்போதே தங்களது தெரிவை நிராகரிக்குமிடத்து அவர்களுக்கு பதிலாக காத்திருப்போர் பட்டியலில் இருந்து புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வாய்ப்பாக அமையும். இவ்வாறே திருமணம், வெளிநாடு செல்லல், வேறு தொழில்களுக்குச் செல்லல் போன்ற காரணங்களுக்காக பயிற்சி நெறியில் இடைவிலகிச் செல்லும் எண்ணம் உள்ளவர்களும் தங்களது தெரிவை ஏற்காது விடின் அவர்களுக்கு பதிலாக சந்தர்பங்களை இழந்து காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியும் என்பதையும் பயிற்சிநெறி ஆரம்பித்ததன் பின் இடை விலகிச் செல்வோருக்குப் பதிலாக புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியாதிருக்கும் என்பதையும் தயவாக கவனத்தில் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் நலன்புரி நிலையமாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பயன்படுத்தப்பட்டதன் காரணமாகவும் அதனால் ஏற்பட்ட உட்கட்டமைப்பு சீர்குலைவு காரணமாகவும் கடந்த 2009,2010 ஆம் ஆண்டுகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி நெறிகளுக்கு மாணவ ஆசிரியர்கள் முற்றாக அனுமதிக்கப்படவில்லை. கல்வியமைச்சு நிதியிலிருந்து தரப்பட்ட 10 மில்லியன் ரூபாவுடன் திருத்தியமைக்கப்பட்ட இரண்டு மாணவ விடுதிகளுடன் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வாண்டு அனுமதிக்கப்படவுள்ள் 160 மாணவ ஆசிரியர்களுக்கு இவ்விரு விடுதிகளும் போதுமானவையாக இல்லாது இருந்த போதிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ்வரும் EnRep நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி திருத்தி அமைக்கப்பட்டு வரும் விடுதிகளையும் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளில் ஆரம்பக்கல்விக்கு 40 மாணவ ஆசிரியர்களும், உயர்கல்விக்கு 20 மாணவ ஆசிரியர்களும், இந்து சமயம் 20 மாணவ ஆசிரியர்களும்,கிறிஸ்தவத்திற்கு 20 மாணவ ஆசிரியர்களும்,விவசாயத்திற்கு 30 மாணவ ஆசிரியர்களும் ,வணிகக் கல்விக்கு 30 மாணவ ஆசிரியர்களும் மொத்தமாக 160 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள் ளனர்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாண்டு விஞ்ஞானம்,கணிதம் ஆகிய பாடநெறிகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படாத போதும் அடுத்த கல்வி ஆண்டில் விடுதி வசதிகள் முற்றாக சீர் செய்யப்படுமிடத்து இப்பயிற்சி நெறிகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என பிரதம ஆணையாளர் உறுதியளித்துள்ளதாக பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த 17ஆண்டுகளாக ஆசிரியர் கல்வித் துறையில் பல்வேறு தடைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து பணியாற்றி வந்திருந்த போதும் கடந்த 200[illegible] 2010ஆம் ஆண்டு அதன் வரலாற்றில் துரதிர்ஷ்டவசமானதும்,கவலைக்குரியதுமான ஆண்டுகளாகும்.

பீடாதிபதியின் பல இடைவிடாத முயற்சியின் பயனாக விடுதிகள் சிலவும் விரிவுரை மண்டபங்களும் திருத்திய மைக்கப்படுகின்றது. முழுமையான மறு சீரமைப்பு செய்யப்படாத நிலையில் வவுனியா கல்வியற் கல்லூரி மீண்டும் ஆரம்பிக்கப்படுகின் றது.

எனினும் மைதான சீர்திருத்தமின்மை ,உட்கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப்படாமை, உணவு விடுதி சீராக்கமின்மை போன்ற காரணங்களால் தொடர்ந்தும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

எனவே கல்லூரிக்கு அனுமதி பெறும் மாணவ ஆசிரியர்களது பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கல்லூரியின் அபிவிருத்திக்கு தம்மால் ஆன பங்களிப்[illegible] வழங்குமாறு அவர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ)

# அம்பாறை மாவட்டத்தில் சீ-பிளேன் விமான சேவை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உல்லாசத் துறையின் மேம்பாடு கருதி அடுத்த மாதம் முதல் சீ- பிளேன் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சீ-பிளேன் விமான சேவையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்பாறை மாவட்ட இராணுவப் பயிற்சி தலைமை அதிகாரி கேணல் ஜயம்பதி திலகரட்ண ,தெரிவித்தார்.

இதற்கு இணங்க அம்பாறை மாவட்டத்தில் உள்ள குளங்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கொழும்புக்கு வருகைதரும் உல்லாசப்பயணிகளை திகாமடுல்ல உள்ளிட்ட கிழக்கு பிரதேசங்களுக்கு வரவழைக்கவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)


## கிளி/வட்டக்கச்சி ம.வி. பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

**இடம்: வித்தியாலய பிரதான மண்டபம்**

**காலம்: 29.01.2011 (சனிக்கிழமை)**

**நேரம்: பி.ப 3.00 மணி**

இவ் வித்தியாலயத்தின் எதிர்கால விருத்தித் திட்டங்கள், புதிய நிர்வாகத்தெரிவு என்பன இடம் பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

**அதிபர்**

(சி-2295)


# கிளி/முருகானந்த ஆரம்ப பாடசாலை ஆரம்பம்



(கிளிநொச்சி)

இசுறுபாயத் திட்டத்தின் கீழ் கிளி/ முருகானந்த மகா வித்தியாலயம் உள் வாங்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் கிளி/ முருகானந்த ஆரம்பப் பாடசாலை தனியொரு பிரிவாகவும் கிளி/ முருகானந்த மகா வித்தியாலயம் பிறிதொரு பிரிவாகவும் இயங்குகின்றது. இதற்கான பெயர்ப்பலகையை அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் திறந்து வைத்தார். (ஸ்ரீ-2)

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும், திருத்திக்கொள்ள விரும்பும்மும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். -லெனின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பொலிஸாருக்கு ஒரு பகிரங்க மடல்

பாட்டெழுதிப் புகழ் வாங்கும் புலவர்கள், பாட்டில் பிழைகண்டு பெருமை பெறும் புலவர்கள் என இரு சாரார் உளர்.

யாமோ பகிரங்க மடல் எழுதி ஏச்சு வாங்கும் பத்திரிகை தரப்பின் பாற்பட்டவர்.

புகழ்வதும் புழுகுவதும் அறியா பாவகாரர்கள் பத்திரியாளர்கள் என்பது நம் முடிபு.

அதேநேரம் இவர்களின் தலையில் 'நல்ல பெயர் கேட்காப் பிறவிகளாய் வாழக் கடவீர்' என பிரமன் தலைவிதி எழுதிவிட்டான்.

அதிலும் யாழ்ப்பாணத்தில் பிறந்த பத்திரிகையாளர் என்றால் ஏச்சும், பேச்சும் இரட்டிப்பு என்பது விதி.

யார் என்ன செய்யமுடியும்! எல்லாம் வகுத்தான் வகுத்த வகை. அதற்காக பகிரங்க மடலை எழுதுவதை நிறுத்த முடியாதல்லவா?

ஆகையால் எங்கள் பொலிஸாருக்கு ஒரு பகிரங்க மடலை எழுதத் தலைப்பட்டோம்.

இப் பகிரங்க மடல் எழுந்தமானமாக-திடீரென எழுதப்படுவதல்ல. மாறாக, பொதுமக்கள் பலரும் குறைபட்டு-வேதனைப்பட்டு கொண்டதன் அடிப்படையில் எழுத முற்படுகின்றோம். அதிலும் குறிப்பாக வடபுலத்தில் கடமையாற்றும் பொலிஸாருக்கே இப்பகிரங்க மடல் சமர்ப்பணம்.

பொலிஸ் சேவை என்பது பொதுமக்களுக்கானது. பொது மக்கள் தங்களின் புறவயமான பாதுகாப்பிற்கு பொலிஸாராகிய உங்களையே முழுமையாக நம்பியிருக்கின்றனர்.

அதேநேரம் நீங்கள் தனித்து பொதுமக்களின் பாதுகாவலராக மட்டுமின்றி, பொதுமக்களுக்கு நீதியை எடுத்துரைக்கும் நீதியாளர்களாகவும் செயற்படுகிறீர்கள்.

எனவே உங்களிடம் நீதி, நேர்மை, தொழில் விசுவாசம் என்பன பஞ்சமின்றி பெருகிக் காணப்படவேண்டும்.

இலஞ்ச ஊழல் என்ற பேச்சுக்கே இடம் தரலாகாது.

இனம், மொழி, மதம், நம்மவர் என்ற விருப்பு வெறுப்புகளுக்கு அறவே இடமிருக்கக் கூடாது.

இவையெல்லாம் உங்களிடம் எதிர்பார்க்கப்படும் சிறப்பம்சங்கள்.

இருந்தும் இவற்றுக்குப் பஞ்சம் நிலவுவதாக மக்கள் கூறிக் கவலை கொள்கின்றனர். நாம் கேட்போம். அவர்கள் தராவிட்டால் அவர்களை ஏதோ ஒருவகையில் மடக்குவோம் என்று நினைப்பது, அதனை அமுல்படுத்துவது எத்துணை அநீதி என்பதை ஒருகணம் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

எனது இனம் என்ற பாகுபாடு உங்களிடம் இருக்குமாயின் இலங்கை என்ற இந்த நாடு எங்களுடையது என நீங்கள் சார்ந்தவர்கள் மட்டுமே கருதிக்கொள்வர். ஆகையால் அன்புக்குரிய பொலிஸ் சகோதரர்களே! உங்களின் சேவையை புனிதமாக்குங்கள். அதற்கு முன்னதாக உங்கள் கரங்கள் தூய்மையாக இருக்கட்டும்.

பொலிஸ் சேவையை தூய பணியாக கருதி கடமைபுரியும் பலர் இருக்கின்றார்கள். அவர்களை ஒரு கணம் பாருங்கள் அவர்கள் தங்களுக்குக்கிடைத்த பணியை இறைவனுக்கு உடன்பாடாக செய்கிறார்கள். நீங்களும் அவர்களாக மாற... நீதி பிறக்கும்.

# கருணா போன்ற சந்தர்ப்பவாதிகளை ஜனாதிபதி மகிந்த நம்பக்கூடாது!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும்.

அதேநேரம் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி எனப்படும் கருணா அம்மான் போன்ற சந்தர்ப்பவாதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நம்பக் கூடாது.

இவ்வாறு முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தாசி செனவிரட்ண தெரிவித்தார்.

உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த போது அவர் இதனைக் கோரியுள்ளார். கிழக்கில் 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூட்டாக படுகொலைச் செய்யப்பட்ட சம்பவம் பாரிய யுத்தக் குற்றச் செயலாக கருதப்படவேண்டுமென வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு நலன்கள் வழங்கப்படவில்லை அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி பொலிஸார் விசாரணைகளை நடத்தவில்லை.

1990ஆம் ஆண்டு இரண்டாம் ஈழப் போரின் போது கிழக்கில் 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் எதுவித விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவின் பணிப்புரைக்கு அமைய முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆட்சி நடத்திய அரசாங்கங்களின் குறைபாடுகள் மற்றும் பிழையான மதிப்பீடுகளினால் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் வெற்றியீட்டினர்.

1993ஆம் ஆண்டு மே தினமன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை புலிகள் படுகொலை செய்த போதிலும் அந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கூட அதன் பின்னர் ஆட்சி நடத்திய அரசாங்கங்கள் விசாரணை நடத்தவில்லை என்றார். (ந-5)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் அபராதம்

## யாழ்.நீதவான் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோத மதுபானத்தை (கசிப்பு) கையிலிருப்பில் வைத்திருந்த குற்றத்திற்காக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் மடம் வீதியில் கசிப்பு வைத்திருந்த குற்றத்தின் பேரில் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் அல்லது ஒரு வருடக்கால சாதாரணச் சிறைத் தண்டனையும், மற்றவருக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் இல்லாவிடில் 5 மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் விதித்து யாழ்.நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ந-6)

# சபாரி வகை மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

## மோட்டார் வாகன திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

49 CC மோட்டார் சைக்கிள் வகையினுள் சபாரி வகை மோட்டார் சைக்கிள் உள்ளடங்காது எனவும் அவ்வகை மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலை கவசம் என்பன அணிய வேண்டும் என யாழ்.மாவட்ட செயலக மோட்டார் வாகன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 49 CC மோட்டார் சைக்கிள் வகைக்குள் அடங்கும் அனைத்து மோட்டார் சைக்கிள்களையும் கடந்த வருட இறுதிக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

இத்தகைய பதிவுகளில் ஏற்பட்ட பல தாமதங்கள் காரணமாக இன்றுவரை பலர் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இவ் சபாரி 4 S மோட்டார் வாகனத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரம், நம்பர் தகடு, தலைக்கவசம், வரிப்பத்திரம், காப்புறுதி என்பன அவசியமானதென யாழ்.பொலிஸ் நிலைய பதில் தலைமை அதிகாரி சி.ஐ.குணசேகரன் தெரிவித்துள்ளார். (ந-6)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 88916 பேர் வாக்களிக்கத் தகுதி

(மன்னார்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 916 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மன்னார் தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி மன்னார் பிரதேச சபைக்கு 24 ஆயிரத்து 658 பேரும் முசலி பிரதேச சபைக்கு 13 ஆயிரத்து 151 பேரும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 18 ஆயிரத்து 707 பேரும் நானாட்டான் பிரதேச சபைக்கு 16 ஆயிரத்து 421 பேரும் மன்னார் நகர சபைக்கு 15 ஆயிரத்து 979 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தேர்தல் திணைக்களம் தேர்தல் தொடர்பான புள்ளி விபரங்கள் அடங்கிய கையேடுகளை ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அனுப்பிவைத்துள்ளது. (ஸ்ரீ)

# 2012ஆம் ஆண்டு முதல் இலத்திரனியல் அ.அட்டை

(கொழும்பு)

புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் 2012ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தும் கருப்பொருள் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அடையாள அட்டை நிச்சயமாக இலத்திரனியல் அட்டையாக மாற்றப்படும் என ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜகத் பி.விஜயவர்தன தெரிவித்தார்.

யுத்த காலத்தில் விடுதலை புலிகள் போன்ற இயக்கங்கள் இலகுவான முறையில் தற்போதுள்ள தேசிய அடையாள அட்டைகளை தயாரித்தன.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை அமுல்படுத்துவதன் மூலம் போலியான அடையாள அட்டை பாவனையை குறைக்கலாம். இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை நாட்டின் தேவை கருதி விரைவில் அரசு அமுல்படுத்தும் என ஆணையாளர் குறிப்பிட்டார். (ந-5)


# சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்

என் அருமைச் சகோதரர்களே! பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான பாடலின் ஒருசில வரிகளை இங்கு உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.



எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்கமிகு நெறி பலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்கு அவைதான் எம்பெரும! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ!

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில், மிக மிகச் சிறந்ததாகக் கருதக் கூடிய இந்தப் பேரவை, கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்திற்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்: 'யார் எந்த வழியாக என்னிடம் வர முயன்றாலும், நான் அவர்களை அடைகிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் என்னை அடைய முயல்கிறார்கள். அவை எல்லாம் இறுதியில் என்னையே அடைகின்றன.'




ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கத்தின் பவளவிழா யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்தியக் குழுவினர் சகிதம் விழாநாயகர் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா மங்கல விளக்கேற்றுவதையும் விழாநாயகர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## காசநோயைக் குணப்படுத்த புதிய தடுப்பூசி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காசநோயைக் குணப்படுத்துவதற்கு புதிய தடுப்பூசியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காசநோய் ஏற்படுவதற்கு முன்னரும், காசநோய் ஏற்பட்டதன் பின்னரும் இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. டென்மார்க் விஞ்ஞானிகளினால் இம் மருந்து கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

உலகின் பிரதான நோய்களில் ஒன்றாகக் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.புதிய தடுப்பூசி மிருகங்களுக்கு ஏற்றப்பட்டு வெற்றிகரமாக பரீசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காசநோய் தொற்றிய சிலருக்கு மட்டுமே நோய் அறிகுறி உடனடியாக வெளிப்படும் எனவும், அநேகருக்கு நீண்ட நாட்களின் பின்னரே உடலில் மாற்றங்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனிதர்களுக்கு இந்தத் தடுப்பூசி வெற்றிகரமாக பரீசிக்கப்பட்டால், எதிர்காலத்தில் காச நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும் என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## போலி முகவர்கள் தொடர்பில் தகவல் அளிக்க கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி போலி முகவர் நிலையங்களை அமைத்து பொதுமக்களை ஏமாற்றி வரும் நபர்கள் தொடர்பான தகவல்களை அளிக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தியமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பான எத்த கைய தகவலையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் விசேட விசாரணைப் பிரிவுக்கு அறி விக்க முடியும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதிநிதிகள் நிலை என்பவற்றோடு தங்களுக்கு தொடர்பு இருப்பதாக பொய்யான தகவல்களை சில சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் வெளியிட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த அரச அமைப்புக்கள் எதுவும் தத்தமது அதிகாரங்களை எந்தவொரு தனியார் நிறுவனத்துக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4-9)

## 10 கிலோ போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை கைது

பயணப் பையில் மறைத்து வைத்துக்கொண்டு வரப்பட்ட 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான 10கிலோ கொக்கேய்ன் போதைப் பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து பாங்கொக்கிற்கு சந்தேகநபர் பயணம் செய்ய விருந்ததாக சுங்க அதிகாரி எம்.வி. ஜயரட்ண தெரிவித்தார்.

தவறவிட்ட பொதிகளைப் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு இவர் வந்திருந்ததாகவும் அங்கிருந்த அதிகாரிகள் இவரது பை தொடர்பில் சந்தேகமுள்ளதாக தமக்கு தெரிவித்ததாகவும் அவரது பயணப் பையை ஆராய்ந்தபோது அதில் கொக்கேய்ன் போதைப்பொருள் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது அண்மைக் காலத்தில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய தொகையாகும். கொக்கேய்ன் போதைப் பொருள் இலங்கையில் அவ்வளவு பிரபல்யம் இல்லை. இதை இவர் பாங்கொக்கிற்கு எடுத்துச் செல்ல விருந்தாரென நம்புகிறோம் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

## நுரைச்சோலை அனல் மின் நிலைய முதற் கட்ட வேலைகள் பூர்த்தி

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதற் கட்ட வேலைகளில் 99 சதவீதமான பங்கு பூர்த்தியடைந்துள்ளதாக சிரேஷ்ட திட்ட முகாமையாளர் டபிள்யு.டி. என். சேவியத் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்த அடிப்படையில் இந்த மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் 70 மெகாவோட்ஸ் மின்சாரம் மொத்தத் தேசிய மின் உற்பத்தியுடன் இந்த மாதம் சேர்க்கப்படவுள்ளது எனவும் இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும் பாவனையாளர்களுக்கு குறைந்த செலவில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-4-9)

## நாடு திரும்ப அனுமதிக்குமாறு கோரி இலங்கைப் பணிப்பெண்கள் ஆர்ப்பாட்டம்



வீட்டுப் பணிப்பெண்களாக வேலைக்குச் சென்ற இலங்கையர்கள் பலர் தம்மை இலங்கைக்கு செல்வதற்கு அனுமதிக்குமாறு கோரி ஜோர்தான் தலைநகரான அம்மானிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

சம்பளம் மறுக்கப்பட்டமை, துஷ்பிரயோகம் போன்ற காரணங்களால் வேலையைவிட்டு வந்த 96 ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதாக தூதுவராலயம் தெரிவித்தது.

இந்த ஊழியர்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ளவும் இவர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யவும் நாம் முயன்று வருகிறோம்.

இவர்கள் வதிவிட அனுமதிக் காலம் முடிந்த பின்னும் இங்கு தங்கியதால் தண்டப்பணம் செலுத்தினால் மாத்திரமே ஜோர்தானை விட்டுச் செல்வதற்கு அனுமதிக் கப்படுவரென இலங்கையின் தூதுவர் அன்ட்ராயஸ் மொஹொட்டலா தெரிவித்தார்.

சிலருக்கு இந்தத் தண்டப் பணத்திலிருந்து விலக்குப்பெற்றுக் கொடுத்துள்ளோம். ஏனையவர்களுக்கு விலக்குப் பெற முயன்று வருகின்றோமெனவும் அன்ட்ராயஸ்மொஹாட்டலா த ஜோர்தான் ரைம்ஸ்க்கு தெரிவித்தார்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராயவென அமைக்கப்பட்ட குழுவினர் 73 பேரை விசாரித்தது.

இவர்களில் 22 பேரை அவர்களுக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்த பின்னர் இலங்கைக்கு அனுப்பவேண்டுமென இக்குழு சிப்ாரிசு செய்துள்ளது. (ஸ்ரீ-2)

- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

20

JAN 2011 TO JUN 2011

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011



சுவாமி விவேகானந்தரின் 149 ஆவது ஜெயந்தி 26.01.2011

நிகழ்ச்சி நிரல்

காலை 6 மணிக்கு ஆரதி, மதியம் 12 மணிக்கு விசேட பூஜை அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

முக்கிய நிகழ்வு

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் அவர்கள் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவன் அ.அருள்ராஜ் அவர்களுக்கு புதிய துவிச்சக்கர வண்டியினை அன்பளிப்பாக வழங்குவார்.

அருட்தந்தை டேமியன் அடிகளார் சேவாச்சிரம நிர்வாகசபை உறுப்பினர் மா. இரத்தினசோதிக்கு நூலினை அன்பளிப்புச் செய்வார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்.
பருத்தித்துறை.

செயலாளர்

(சி-2294)

# இலங்கை, இந்திய அணிகளுக்கு உலகக்கிண்ணம் வெல்லும் வாய்ப்பு

## தென்னாபிரிக்க பயிற்றுவிப்பாளர் கருத்து

(செஞ்சூரியன்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் அதிரடியில் மிரட்டி, அசத்தலான சதம் விளாசிய இந்தியாவின் யூசுப்பதானை கட்டுப்படுவது கடினம் என்கிறார் தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் வான் ஜில்.

தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்தது. சென்சூரியனில் நடந்த கடைசி ஒருநாள் போட்டியில் 8 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் என இந்தியா தடுமாறிய நிலையில் எழுச்சிகண்ட யூசுப்பதான் அதிரடியாக சதம் விளாசி அணியை வெற்றிக்கு அருகில் கொண்டு சென்றார்.

இது குறித்து தென்னாபிரிக்கப் பயிற்சியாளர் வான் ஜில் கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான தொடரில் பவுன்சர்கள் முக்கிய பங்கு வகிக்கும் என நினைத்தோம். டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் இதை அருமையாக சமாளித்தனர். ஆனால் ஒருநாள் தொடரில் சொதப்பினர். இதனால்தான் மோர்கல், ரிசொற் சோபே இருவரும் இந்திய அணியின் முதல் வரிசையை தகர்த்து அதிக விக்கெட் வீழ்த்த முடிந்தது.

**துணிச்சல் போராட்டம்**

இந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரிலிருந்து அதிக பாடங்கள் கற்றுள்ளோம். நாங்கள் செய்தவறுகளால் 1:2 என பின்தங்கி பின்னர் தொடரை வென்றோம். இந்தியா டெஸ்ட் தரவரிசையில் நம்பர்-1 இடத்திலுள்ள அணி. இந்நிலையில் அவர்களிடமிருந்து அதிக போராட்டத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பது மிகவும் கேலிக் கூத்தானது.

இதை ஏற்கனவே எதிர்பார்த்து தான் இருந்தோம். ஆனால் எதிர்பார்ப்பைவிட சற்று கூடுதலாகவே போராட்டம் இருந்தது. இந்திய வீரர்கள் ஒருங்கிணைந்து கடைசிவரை துணிச்சலாக போராடினர் இருப்பி னும் தொடரை வென்றது, உலகக் கோப்பை தொடரை உற்சாகமாக ஆரம்பிக்க முடியும்.

**கட்டுப்படுத்த முடியாது**

இந்தியாவின் யூசுப்பதான் அதிரடியான வீரர் சென்சூரியன் போட்டியில் இவரும், சகீர்கானும் இணைந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவரது சில சொட்டுக்கள் நம்ப முடியாத வகையிலிருந்தது. இந்தியா 8 விக்கெட்டுக்களையிழந்த நிலையில் தோல்விஉறுதியாகியிருந்தது. ஆனால் யூசுப்பதான் போட்டியை எங்களிடம் கொண்டு செல்லவிருந்தார். நல்ல வேளையாக மோர்கல் கைகொடுத்தார். உலகக்கிண்ணத் தொடரில் யூசுப்பதானை கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினம்.

**மாறும் ஆடுகளங்கள்**

உலகக்கிண்ணத்தை வெல்லும் அணிகளில் முதலிடத்திலிருப்பது இந்தியா தான் ஏன் எனில் சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது என்பது கடினமான காரியம். இரண்டாவதாக இலங்கையைக் குறிப்பிடலாம். அடுத்து சமீபகாலமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இங்கிலாந்து அணியும் போட்டியிலுள்ளது.

இந்தியாவில் ஆடுகளங்கள் நிலையில்லாத தன்மை கொண்டவை ஒருநாள் போட்டிகளின் போது திடீரென மாறும் இயல்புள்ளது. அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் எப்படிச் செயல்படுகின்றனர் என்பதை பொறுத்து உலகக் கோப்பை தொடரின் வெற்றி அமையும் இவ்வாறு வான் ஜில் கூறினார்.

# பத்ம ஸ்ரீ விருது பெறுகிறார் கிரிக்கெட் வீரர் லக்ஸ்மன்

இந்திய கிரிக்கெட் வீரர் வி.வி. எஸ்.லக்ஸ்மன் பத்ம ஸ்ரீ விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியின் அசத்தலான துடுப்பாட்டவீரர் லக்ஸ்மன் (36) தொடர்ந்து 15ஆண்டுகளாக கிரிக்கெட்டில் நீடித்து வரும் இவர் இக்கட்டான நேரங்களில் இந்தியா தத்தளிக்கும் போதெல்லாம் தனது சிறப்பான ஆட்டத்தால் அணியை காப்பாற்றுவதில் வல்லவர். 2001ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 281 ஓட்டங்கள் எடுத்து இந்திய வெற்றிபெற உதவினார். கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு எதிரான டெஸ்டில் சதம் (103) அடித்து தொடரை சமன் செய்ய உதவினார்.

பின் அவுஸ்திரேலியாவுடனான மொகாலிடெஸ்டில்காயத்துடன்விளையாடி73ஓட்டங்களைஎடுத்துஅணியை வெற்றி பெறச் செய்தார். சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டர்பன் டெஸ்டில் லக்ஸ்மன் எடுத்த 96ஓட்டங்கள் காரணமாகத்தான் தொடரை சமன் செய்ய முடிந்தது.

இதை கௌரவிக்கும் வகையில் இம்முறை லக்ஸ்மனுக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்படுகிறது. இதற்கு முன் கிரிக்கெட்டில் கவாஸ்கர், கபில் தேவ்,சச்சின், கங்குலி, டிராவிட், கும்ளே மற்றும் தோனி ஆகியோர் இவ்விருது பெற்றுள்ளனர்.விருது பெற்றது குறித்து லக்ஸ்மன் கூறுகையில்,

பல ஆண்டுகளாக இந்திய அணிக்காக விளையாடுவதையே பெருமையாக கருதுகிறேன். இந் நிலையில் மிக உயர்ந்த பத்ம ஸ்ரீ விருது கிடைத்தது மிகப் பெரும் கௌரவமாக உள்ளது. எனது இந்த திறமையை வெளிக் கொணர்ந்த பெற்றோர்கள் ஆதரவளித்த மனைவி மற்றும் உறவினர்களுக்கு நன்றி என்றார்.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் பெடரர், வோஸ்னியாக்கி

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறி உள்ளனர்.

மெல்போர்னில் அவுஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் உலகின் நம்பர்-2 வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சகநாட்டைச் சேர்ந்த ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவை எதிர்கொண்டார்.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பெரடர் 6:1, 6:3, 6:3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று தொடர்ந்து 8ஆவது முறையாக (2004-2011) அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் செர்பியாவின் நோவக் டோகோவிச் 6:1, 7:6, 6:1 என்ற நேர் செட்டில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சை வீழ்த்தினார். இதன் மூலம் அரையிறுதியில் டோகோவிச் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை சந்திக்கிறார். கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த இத் தொடரின் அரையிறுதியில் டோகோவிச் பெடரரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

**வோஸ்னியாக்கி அபாரம்**

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் உலகின் நம்பர்-1 வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியனோனேவை சந்தித்தார்.

இதில் வோஸ்னியாக்கி 3:6, 6:3, 6:3 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் சீனாவின் நா லீ 6:2, 6:4 என்ற நேர் செட்டில் ஜேர்மனியின் ஆன்டிரியா பெட்கோவிச்சை வீழ்த்தினார்.

இதன் மூலம் அரையிறுதியில் நா லீ டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை எதிர்கொள்கிறார்.

# உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் ரூபாய் 13 கோடிக்கு வர்த்தகம் நடக்கும்

## ஐ.வி.எஸ். நிறுவனம் கணிப்பு

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் வர்த்தகம் 13.5 கோடி ரூபாயை தாண்டு மென பிரிட்டனின் ஐ.வி.எஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறும் மைதானங்களிலும் ஒன்லைன் மூலமாகவும் கிரிக்கெட் ரசிகர்களை கவரும் வகையில் ரீஷேர்ட்கள், தொப்பிகள், சாவிக்கொத்துக்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் உரிமையை பிரிட்டனின் ஐ.வி.எஸ். நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி).

இது குறித்து அந்த நிறுவனத்தின் திட்ட மேலாளர் மாத் ஹஸ்ஸல் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

போட்டி நடைபெறும் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளில் மைதானங்கள், விமான நிலையங்கள், ஹோட்டல்கள் உள்ளிட்ட இடங்களில் எங்களது பொருட்களின் விற்பனை மையங்களை நிறுவவுள்ளோம். எங்களது விற்பனை மையத்தில் விற்கப்படும் பொருட்கள் கிரிக்கெட் ரசிகர்களை வெகுவாகக் கவரும்.

இந்த உலகக் கிண்ணத்தின் போது எங்களது நிறுவனத்தின் வர்த்தகம் 13.5 கோடி ரூபாயைத் தாண்டுமென்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.


HUDEC

## கியூடெக் - கரித்தாஸ் யாழ்ப்பாணம்

CARITAS

# கூறுவிலை கோரல்

கரித்தாஸ்-கியூடெக்யாழ்ப்பாணசெயற்திட்டத்தினால்மேற்கொள்ளப்படவிருக்கும் அரை நிரந்தர வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் அமைப்பதற்கு தேவையான கட்டிடப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குனர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் வழங்கல்களுக்காக இதற்கென தயாரிக்கப்பட்ட கூறுவிலை கோரும் விண்ணப்பப்படிவத்தினை எமது அலுவலகத்தில் 27.01.2011 வியாழக்கிழமை தொடக்கம் 02.02.2011 மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக் கொண்ட விபரங்களுக்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 03.02.2011 காலை 10.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக ‘ இயக்குனர் கரித்தாஸ் -கியூடெக், த.பெ.எண் - 159, யாழ்ப்பாணம் ’ என பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்கவும்.

இக்கூறுவிலை விண்ணப்பங்கள் யாவும் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு தங்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘கட்டிடப் பொருட்கள் வழங்கலுக்கான கூறுவிலை ’ என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**விநியோகிக்க வேண்டிய இடம்**

| பொருட்களின் விபரம் | யாழ்ப்பாணம் தொகை | கரியாலை நாகபடுவான் முழங்காவில் கிளிநொச்சி மாவட்டம் தொகை | ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு மாவட்டம் தொகை |
|---|---|---|---|
| சீமெந்து | 2000 பாக் | 2120 பாக் | 2120 பாக் |
| சல்லி 3/4” | 15 கியூப் | 16 கியூப் | 16 கியூப் |
| கண்ட கல் 6”X 9” | 70 கியூப் | 74.2 கியூப் | 74.2 கியூப் |
| கண்ட கல் 4” | 25 கியூப் | 26.5 கியூப் | 26.5 கியூப் |
| முறுக்குக் கம்பி(1/2”) | 300 தனி | 318 தனி | 318 தனி |
| முறுக்குக் கம்பி(3/8”) | 300 தனி | 318 தனி | 318 தனி |
| மென் இரும்பு (1/4”) | 3000 தனி | 3180 தனி | 3180 தனி |
| சொலிக்கனம் | 250 லீற்றர் | 265 லீற்றர் | 265 லீற்றர் |
| வயர் நூல் | 50 கிலோ | 53 கிலோ | 53 கிலோ |
| கம்பி ஆணி (1”,2”,3”) | 175 கிலோ | 185.5 கிலோ | 185.5 கிலோ |
| ட.கொழுக்கிகள் | 2000 கிலோ | 2120 கிலோ | 2120 கிலோ |
| குடை ஆணி + நட் | 550 கிலோ | 583 கிலோ | 583 கிலோ |
| சிங் அலுமினிய கூரை தகடுகள் | 800 தனி | 848 தனி | 848 தனி |
| அஸ்பெஸ்ரா கூரை தகடுகள் | 100 தனி | 106 தனி | 106 தனி |
| முகட்டுத் தகரம் | 1000 அடி | 1060 அடி | 1060 அடி |
| சுவர் தீராந்தி (3”X5”-15’) | 150 தனி | 159 தனி | 159 தனி |
| சுவர் தீராந்தி (3”X5”-10’) | 200 தனி | 212 தனி | 212 தனி |
| தீராந்தி (4”X3”-5’) | 150 தனி | 159 தனி | 159 தனி |
| கை மரம் (2”X3”-10’) | 1100 தனி | 1166 தனி | 1166 தனி |
| கை மரம் (2”X3”-8’) | 100 தனி | 106 தனி | 106 தனி |
| சிலாகை (2”X1”) | 8000 அடி | 8480 அடி | 8480 அடி |
| சிலாகை (2”X2”) | 8000 அடி | 8480 அடி | 8480 அடி |
| கிடுகுகள் | 7500 தனி | 7950 தனி | 7950 தனி |

அருட்பணி J.X. பேணாட் றெக்னோ
இயக்குனர்
கரித்தாஸ் -கியூடெக்
14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C-2297)

# பொன்சேகாவின் விசாரணை குறித்த தீர்மானம் 11ஆம் திகதி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 89(ழ) உறுப்புரிமை யின்படியும் இராணுவ சட்டத்தின் படியும் இராணுவநீதிமன்றம்ஒருநீதிமன்றமேஎனஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங் கியுள்ள நிலையில் இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை இரத்துச்செய்து தன்னைத் தொடர்ந்து நாடாளுமன்ற அங்கத்தவராகப் பிரகடனம் செய்யும்படி மேன் முறையீட்டுநீதிமன்றில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா தாக்கல் செய்த ஆணை கோரும் மனுவை விசாரிப்பதா? இல்லையா? என பெப்ரவரி 11 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித் தது.

மனுதாரரரான சரத் பொன்சேகாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி றொமேஸ் டி சில்வா இந்த மனுவில் இராணுவ நீதிமன்றம் ஒரு நீதிமன்றமா? எனத் தீர்ப்பளிக்கும் படி கேட்டது ஒரு அம்சமே என்றும் இந்த மனுவில் வேறு விடயங்களும் அடங்கியிருப் பதால் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கேட்டுக் கொண்டவாறு மனுவை இரத்துச் செய்யக் கூடாது என வாதிட்டார்.

இந்நிலையில் இது பற்றிய தீர்ப்பை நீதிமன்றம் பெப்ரவரி 11 ஆம் திகதி வரை ஒத்திவைத்தது. (ந-5)

## நிபுணர் குழு...

சபையின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்ற வேளையில் பான் கீ மூனின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் இத னைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கையளிக்கப்படப்போகும் அறிக்கை தொடர்பில் முன்கூட்டியே ஊகித் துக் கூறுவது சிறந்தது இல்லை எனவும் இலங் கை மாத்திரமின்றி ஏனைய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் தொழிற்பாடுகளை விமர் சிப்பது ஏற்புடையது இல்லைஎன்றும்பர்ஹான் ஹக் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## திங்கள், புதன்...

களில் பணிபுரிபவர்கள் திங்கள், புதன் கிழ மைகளில் பொதுவான சீருடையை அணிய வேண்டும் என்ற நடைமுறை விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத் தீர்மானங்களை யாழ்.இலங்கை நிர் வாக சேவை சங்கம் எடுத்துள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ந-5)

## அதிகாரப்...

துள்ளது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளுடன் அரசாங்கம் நடத் திய முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்துவது மற் றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட் டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெப்ரவரி மாதம் நடைபெறும் பேச்சுவார்த் தையில் அதிகாரத்தைப் பரவலாக்குவது, அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சு நடத்தப் படும் எனவும் மாகாண சபைகளுக்கு அதி காரங்களைப் பரவலாக்குவது குறித்து விசேட கவனம் செலுத்தி இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இதுவரை நடை பெற்ற பேச்சுவார்த்தைகள் இணக்கமான நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் தெரி வித்துள்ளார். (ந-5)

## மக்களின்...

திரமே தான் தலைவணங்குவதாகவும் அந் தத் தீர்ப்பை மக்கள் மிக விரைவில் வழங்கு வார்கள் எனவும் பொன்சேகா தெரிவித்து ள்ளார். (ந-5)




# அரிசி மாவில் பாண் தயாரிக்கும் ஆலை வெயாங்கொடயில் திறப்பு

(கொழும்பு)

கோதுமை மாவுக்குப் பதில் அதிகளவு அரிசி மா பயன்படுத்தி பாண் தயாரிக்கும் தொ ழில்நுட்பம் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம் 80 சதவீதம் அரிசி மாவைக் கொண்ட பாணைத்தயாரித்து சந்தைப்படுத்த முடி யும் என்று மத்திய பிரதேச அபிவிருத்தித் திணைக் கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிகப் பிந்திய நவீனத்துவம் வாய்ந்த அரைக்கும் தொழில் நுட்பம் அண் மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் அரிசி மாவாலையை வெயாங்கொடவில் கடந்த 20 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் ஆளு நர் அஜித் நிவாட் கப்ரால் திறந்து வைத்தார்.

இந்த ஆலை மூலம் 20 சதவீதம் கோது மை மாவுடன் உயர்ந்தபட்சம் 80 சதவீதம் அரிசி மாவினையும் கலந்து பாணைத் தயாரிக்க முடியும். இது மக்களுக்குப் புதிய சுவையை அறிமுகப்படுத்துவதுடன் கோதுமை மாவில் தங்கியிருப்பதையும் வெகுவாகக் கட்டுப்படுத் தும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

வடக்கு- கிழக்கில் வயல் நிலங்கள் முழுவ தும் பயிரிடப்பட்டதும் நாட்டின் நெல் உற்பத்தி குறிப்பிடத் தக்க அளவு அதிகரிக்கும். இதனால் மிகையானநெல்உற்பத்திகிடைக்கும். இதனைக் கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவு செய்து அந்த அரிசியை மூலப்பொருளாகக் கொண்டு அரிசிமாப் பாணைத் தயாரிக்கலாம்.

அத்துடன் கோதுமை மா சார்ந்த உற்பத் திகளைக் காட்டிலும் அரசிமா சார்ந்த உற்பத் திகள் ஆரோக்கியமானது என்ற வகையில் நாட் டிற்குபல்வேறு நன்மைகள் இதன் மூலம் கிடைக்கும் என்று பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. (ந-5)

## ஜனாதிபதி மகிந்த...

எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஆராயும் ஐ.நா நிபுணர்குழு அதன் அவதானங்களை வரும் நாட்களில் பான் கீ மூனுக்குச் சமர்ப்பிக் கவுள்ள நிலையில் இக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவரான கெனத் ரூத் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். மனித உரிமைகள் விடயத்தில் உலகத் தலைவர்களின் மெத்தனப்போக்கு என்ற தலைப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிபுணர்குழுவின் அறிக்கை இலங்கை உட் பட ஏனைய நாடுகளில் எதிர்காலத்தில் இடம் பெறக் கூடிய மனித உரிமை மீறல்களைத் தடுக்கக்கூடிய வகையில் இருக்கும் என்று கொள்ளமுடியாதுள்ளது என இவ்வறிக்கை யில் சுட்டிக்காட்டியுள்ளார். உலகத்தலைவர்கள் ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வ தேச ஸ்தாபனங்கள் இலங்கை விடயத்தில் மென்மையான போக்கை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? என்று சாடியுள்ளார். (ந-5)

## ஜனாதிபதியின் அமெ...

பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச் சர், ஜனாதிபதியின் செயலாளர், அரசாங்க உயர திகாரிகள் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 20பேர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி ரிச்சர்ட் ஆர்மிடேஜை சந்தித்து என்ன பேசினார் என்பது இதுவரை நாட் டுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. எந்த வொரு ராஜதந்திர நடவடிக்கையில் கலந்து கொள்ளவும், பேச்சுவார்த்தை நடத்தவும், வெளிநாடுகளுக்குச் செல்லவும் ஜனாதிப திக்கு உரிமை உள்ளது. எனினும் ஜனாதிபதி யின் அமெரிக்க விஜயத்தின் இரகசியம் என்ன என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துவது முக் கியமாகும்.

ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தை தனிப்பட்ட விஜயம் எனக் கூறி எதனை மறைக்க முற்படுகின்றார். ஜனாதிபதி 19ஆம் திகதி அமெரிக்காவுக்கு சென்றார். இன்று வரை அரசாங்கம் அவரது விஜயம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

ஜனாதிபதி அமெரிக்காவுக்கு சென்று மேற் கொள்ளப்போகும் ராஜதந்திரப் பணி என்ன என்பதை நாட்டுக்கு தெளிவுபடுத்துவது முக் கியமானது. அரச பணத்தில் தனிப்பட்ட விஜ யத்தை மேற்கொண்டுள்ளதாக கூறுவது எத னை மறைப்பதற்காக? ஜனாதிபதியின் இந்த விஜயம் பற்றி அரசாங்கம் நாட்டுக்கு தெளிவுப டுத்த வேண்டும். இந்த விஜயம் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விஜயமாக இருந்தால் அதுபற்றி நாட்டு மக்கள் அறிந்து கொள்ள உரிமையுள்ளது எனவும் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார். (ந-5)

## இராணுவ நீதிமன்றம் என்...

மன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமா? என்பதை உயர் நீதிமன்றத்திடம் கேட்டிருந்தது.

எந்தவொரு நபரும் இரண்டு வருடத்திற்கு குறைவான சிறைத்தண்டனையைப் பெறக் கூடிய தவறைச் செய்திருந்தால் நீதிமன்றத்தி னால் குற்றவாளியென அறிவிக்கப்பட்டு ஆறுமாதங்கள் சிறைத்தண்டனையை அனு பவித்திருந்தால் அவர் நாடாளுமன்றப் பதவி யை வகிக்கத் தகுதியற்றவர் என அரசியல மைப்பின் 9வது பிரிவின் எவ் சரத்தில் கூறப் பட்டுள்ளது.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள நீதி மன்றம் என்ற வாக்கியத்தில் இராணுவ நீதி மன்றம் அடங்காது என சரத் பொன்சேகா வின் சட்டத்தரணி தனது மனுவில் தெரிவித் திருந்தார். இராணுவ நீதிமன்றம் இலங்கை அரசியலமைப்பிற்கு உட்பட்டு ஏற்றுக்கொள் ளப்பட்ட நீதிமன்றம் எனமேன்முறையீட்டு நீதி மன்றம் அறிவித்துள்ளது. (ந-5)

## சரணடைந்த புலிகளை...

சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக் கொடி விவகார வழக்கில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமான இராணுவ நடவடிக்கை யின் போது, 11 ஆயிரத்து 568 விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைந்ததாகவும் அவர் களில் 5 ஆயிரத்து 500 பேர் புனர்வாழ் வளிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப் பட்டதாகவும் பாதுகாப்புச் செயலாளர் குறிப் பிட்டுள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர தலை மையிலான மூவரடங்கிய நீதிபதிகள் அமர் வின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

வெள்ளைக்கொடி வழக்கு விசாரணைக் காக நேற்று மேல் நீதிமன்றத்திற்கு சென்ற பாதுகாப்புச் செயலாளர் ஊடகவியலாளர் கண்களில் படாமல் பின் வழியாகப் போய் பின்வழியாகவே சென்றுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் நேற்று சாட்சிய மளிக்கச் சென்றதை முன்னிட்டு மேல் நீதி மன்றத்தைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

இதன்போது எந்தவொரு ஊடகவியலா ளரின் புகைப்படக் கருவியிலும் சிக்கிக்கொள் ளாமல் நீதிமன்றத்திற்குச் சென்ற பாதுகாப் புச் செயலாளர் சாட்சியமளித்துவிட்டு எந்த வொரு ஊடகக் கருவியிலும் சிக்காமலே சென்றுவிட்டார்.

நீதிமன்றில் சாட்சியமளித்த பாதுகாப்புச் செயலாளர், நீதிமன்ற வரைமுறைகளை மீறி செயற்பட்டதாகவும்அவர்கடும்ஆத்திரம்கொண்டு காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது பாதுகாப்புச் செயலாளரிடம், நீங்கள் பிஸ்னஸ் டுடே சஞ்சிகைக்கு வழங்கிய செவ் வியில் உலகத்திலேயே சிறந்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எனத் தெரிவித்தீர் கள் தானே என வினவியபோது, அதற்கு மளுப்பல் போக்கில் பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர், சாக்குப் போக்குக்களைக் கூறிய துடன் அப்போது இராணுவத்தளபதி பதவி யில் சரத் பொன்சேகா அல்ல வேறு எவர் இருந்தாலும் விடுதலைப்புலிகளுடனான வெற்றி என்ற இலக்கை அடைந்திருப்போம் எனவும் குறிப்பிட்டார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.